Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

இன்றைய நாகரீகம்! நாளைய நாகரீகம்!

மகாராசி சில்க்ஸ்

மங்கல நிகழ்வுகளுக்கு மகாராசியான ஸ்தாபனம்

மகாராசி சில்க்ஸ்

59, நவீனசந்தை உட்புறம், யாழ்ப்பாணம்.

T.P.No : 0777286247.

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆவணி 23 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ரஜப் 22 (08.09.2004) புதன்கிழமை இதழ்:341

## நாயன்மார்கட்டு - குளத்தடிப் பகுதியில்

# கழுத்துவெட்டப்பட்ட நிலையில் இளைஞரின் சடலம் மீட்பு!

(யாழ்ப்பாணம்)

கழுத்து வெட்டி கொலைசெய்யப்பட்ட நிலையில் - குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் நேற்று நாயன்மார்கட்டு குளத்தடியில் கண்டு பிடிக்கப்பட்டது.

கல்வியங்காடு - கட்டப்பிராயைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான நவரத்தின ராசா பிறேம்குமார் (வயது - 25) என்ற இளைஞனின் சடலமே கண்டுபிடிக்கப்பட்டது.

யாழ்நகரிலுள்ள புடவைக்கடை ஒன்றில் பணியாற்றிய இவர், நேற்றுமுன்தினம் மாலை வீட்டிலிருந்தபோது இனந்தெரியாதவர்கள் அழைத்துச் சென்றதாகவும் - மோட்டார் சைக்கிளில் சென்ற இவர், இரவு வரை வீடு திரும்பாததையடுத்து, அவரது மனைவி அன்றிரவே யாழ். போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்திருந்தார்.

எனினும், நேற்று அதிகாலை கழுத்து வெட்டப்பட்ட நிலையில் அவரது சடலம் நாயன்மார்கட்டுப் பகுதியில் கிடப்பதாக அயலவர்கள் தெரிவித்ததையடுத்து அங்கு சென்று பார்த்தபோது வீதியோரமாக அவரது சடலம் கிடந்தது.

இறந்தவரின் சடலம் நேற்று நண்பகல் சமாதான நீதிவானும், உத்தியோகப்பற்றற்ற

(12 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகள் மீது குற்றம் சுமத்திக்கொண்டு பேச்சுக்களை அரசு தாமதிக்கின்றது!

## நாடாளுமன்றத்தில் சம்பந்தன் குற்றச்சாட்டு



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் மீது குற்றம் சுமத்திக்கொண்டு, அரசாங்கம் பேச்சுவார்த்தைக்குச் செல்லாமல் காலம் கழித்து வருவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் அரசாங்கத்தின் மீது குற்றஞ்சாட்டியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குற்றச்சாட்டை சுமத்தினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -

விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களை அரசாங்கம் தாமதிக்காது ஆரம்பிக்கவேண்டும். அது நிச்சயமாக விடுதலைப் புலிகள் முன்வைத்த இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையை அடிப்படையாகக் கொண்டு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழ மீட்புநிதி மீளளிப்பு; பெயர் விபரம் உள்ளே

## வல்லையில் மீட்கப்பட்ட

# எலும்புக்கூடு குறித்து நீதிவான் விசாரணை!

(வடமராட்சி)

வடமராட்சி - வல்லைவெளிப் பகுதியிலுள்ள மயானம் ஒன்றுக்கருகில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கண்டெடுக்கப்பட்ட மனித எலும்புக்கூடு தொடர்பாக நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் பருத்தித்துறை மாவட்ட நீதிபதி அ.அரியரட்ணம் தலைமையில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த விசாரணைகளில் யாழ்.மாவட்ட வைத்திய அதிகாரி பாலசுப்பிரமணியம், மந்திகை ஆதார வைத்தியசாலை மாவட்ட வைத்திய அதிகாரி கதிரவேற்பிள்ளை, நெல்லியடி பொலிஸார் மற்றும் யாழ்.பல்கலைக் கழக மருத்துபீட மாணவர்கள் ஆகியோர் [illegible]ந்துகொண்டனர்.

[illegible] சடலம் கிடந்த இடத்திலிருந்து விசாரணை [illegible]ளர்களால் - மண்டையோடு, இடுப்பு எலும்புகள், தோள்பட்டை எலும்புகள், கால் என்புகள் மற்றும் கிறிஸ்தவ சிலுவை, மெழுகுதிரி, சென்ட் போத்தல், சவப்பெட்டித் துண்டு, இரண்டு சொக்ஸ் என்பன மீட்கப்பட்டன.

இந்த என்புகளை வைத்து 25 - 30 வயதிற்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளுடன் அரசு பேசுவது இனிமேல் சாத்தியம் இல்லை!



## ஜே.வி.பியின் ரில்வின் சில்வா முழக்கம்

(கொழும்பு)

**விடுதலைப் புலிகள் தாம் சமர்ப்பித்த இடைக்கால நிர்வாக சபை யோசனையின் அடிப்படையில்தான் பேச்சுக்களை மீள ஆரம்பிக்க முடியும் என்று வலியுறுத்தி வருகின்றனர்.**

**ஆனால், இடைக்கால நிர்வாக யோசனையை அடிப்படையாகக் கொண்டு சமாதானப் பேச்சுக்களை அரசாங்கம் ஒருபோதும் ஆரம்பிக்காது.**

**எனவே சமாதானப் பேச்சுக்கள் ஒருபோதும் மீண்டும் இடம்பெறப்போவதில்லை என ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.**

சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவித்திருப்பதாவது - நோர்வே தவிர்ந்த ஏனைய நாடுகள் இடைக்கால நிர்வாகசபையை வழங்கமுடியாதெனத் தெரிவிக்கின்றன. இது இடைக்கால நிர்வாகசபை அல்ல. உண்மையில் இது தனி அரசிற்கான பயணத்தின் இறுதி நடவடிக்கை. இதனை வழங்கிய பின்னர் தமிழீழ விடுதலைப்புலிகள் தனி அரசினை அமைத்துவிடுவர்.

இதனை வழங்கியபின் எமக்கு இறுதித் தீர்வு பற்றிப் பேசுவதற்கு

(12 வும் பக்கம் பார்க்க)

புகள், தோள்பட்டை எலும்புகள், கால் என்புகள் மற்றும் கிறிஸ்தவ சிலுவை, மெழுகுதிரி, சென்ட் போத்தல், சவப்பெட்டித் துண்டு, இரண்டு சொக்ஸ் என்பன மீட்கப்பட்டன.

இந்த என்புகளை வைத்து 25 - 30 வயதிற்

(12 ஆம் பக்கம் பார்க்க)



சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவித்திருப்பதாவது - நோர்வே தவிர்ந்த ஏனைய நாடுகள் இடைக்கால நிர்வாகசபையை வழங்கமுடியாதெனத் தெரிவிக்கின்றன. இது இடைக்கால நிர்வாகசபை அல்ல. உண்மையில் இது தனி அரசிற்கான பயணத்தின் இறுதி நடவடிக்கை. இதனை வழங்கிய பின்னர் தமிழீழ விடுதலைப்புலிகள் தனி அரசினை அமைத்துவிடுவர். இதனை வழங்கியபின் எமக்கு இறுதித் தீர்வு பற்றிப் பேசுவதற்கு (12 ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள

# பயங்கரவாத தடுப்புப் பிரிவு அதிகாரி இவ்வாரம் இலங்கை வருகின்றார்!




(கொழும்பு)

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பயங்கரவாத தடுப்புப் பிரிவின் தலைமை அதிகாரியான லார்ஜ் ஜே கொபர் பிளக் இவ்வாரம் இலங்கைக்கு விஜயத்தை மேற்கொள்ளவிருப்பதாக கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.

அவர் கொழும்பில் தங்கியிருக்கும் காலத்தில் வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள் இராணுவ மற்றும் பொலிஸ் அதிகாரிகளையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

2002 ஆம் ஆண்டு முதல் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் தலைமை அதிகாரியாகப் பதவி வகித்துவரும் பிளக், பயங்கரவாதத் தடுப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள நாடுகளுடன் தமது உறவைப் பகிர்ந்துகொள்ளும் வகையிலேயே இலங்கைக்கான விஜயத்தை மேற்கொள்ளவிருப்ப

(12 ஆம் பக்கம் பார்க்க)

# இ.தொ.காவினருக்கு பதவி வழங்க விரைவில் அமைச்சரவை மாற்றம்!

(கொழும்பு)

அரசாங்கத்துக்கு நிபந்தனை அற்ற ஆதரவை வழங்குவதாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அறிவித்ததையடுத்து அமைச்சரவையில் மாற்றம் ஒன்று இடம்பெறவுள்ளதாக அரசாங்கத் தரப்பை மேற்கோள் காட்டும் செய்திகள் தெரிவித்தன.

இ.தொ.கா. நாடாளுமன்ற உறுப்பினர்களையும் அமைச்சரவையில் இணைத்துக் கொள்ளும் வகையிலேயே இந்த மாற்றங்கள் இடம்பெறவிருப்பதாகத் தெரியவருகிறது.

இந்த மாற்றத்தின் அடிப்படையில் இ.தொ.காவுக்கு இரண்டு அமைச்சுப் பொறுப்புக்கள் வழங்கப்படவுள்ளன. தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு, நகர அபிவிருத்தி அமைச்சு ஆகியனவே இ.தொ.காவுக்கு வழங்கப்படவுள்ளது.

தற்போது இந்த அமைச்சுக்களை வைத்திருக்கும் சி.வி.சரத் ரூபசிங்கவுக்கு தோட்டக் கைத்தொழில் அமைச்சும், அனுர பிரிய தர்சன யாப்பவுக்கு தகவல்துறை அமைச்சும் வழங்கப்படவுள்ளது.

பெரும்பாலும் பீலிக்ஸ் பெரேராவிடம் உள்ள போக்குவரத்து அமைச்சும் மாற்றத்துக்குள்ளாகும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு மற்றும் அதன் பிரதி அமைச்சையும் பொறுப்பேற்றுக்கொள்ளத் தீர்மானித்துள்ளது.

நேற்று நாடாளுமன்றக் கட்டடத்தில் நடைபெற்ற கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்திலே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதன்படி நாடாளுமன்ற உறுப்பினர் முத்துசிவலிங்கம் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சராகப் பதவியேற்க இருக்கிறார்.

இவர் எதிர்வரும் வெள்ளிக்கிழமை அமைச்சராகப் பதவிப் பிரமாணம் மேற்கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.




இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

எக்ஸ்போ ஏயார்
வான்வெளியில் உங்கள் நண்பன்...

EXPOAIR
Your friend in the skies...

# நிவாரணம் புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சு

## யாழ்ப்பாண மாநகர பிரதேச நீர் பாதுகாப்பு சூழல் முகாமைத்துவத் திட்டம்.

## நோர்வே அரசாங்கத்தினால் நிதிப்படுத்தப்பட்டது.

# கேள்வி அறிவித்தல் - இல.01

1. ஸ்ரீலங்கா ஜனநாயக சோசலிச குடியரசின் பொருளாதார சுற்றுப்புற அபிவிருத்தியை முன்னேற்றுவதற்காக நோர்வே அரசாங்கத்துடனான ஒப்பந்தம் ஒன்றின் அடிப்படையில் மேற்படி திட்டத்திற்கான நிதி இலங்கை அரசாங்கத்திற்கு கிடைக்கப்பெற்றுள்ளது. இதன் கீழ் தரப்பட்டுள்ள அட்டவணைகளில் விபரிக்கப்பட்ட, யாழ் மாநகர எல்லைக்குட்பட்ட சிறு குளங்களைப் புனரமைக்கும் வேலைகளுக்காகவும் சிறிய கட்டட நிர்மாண வேலைகளுக்காகவும் பகிரங்க கேள்விகள் இத்தால் கோரப்படுகின்றது.
2. மாவட்ட செயலாளர்/அரசாங்க அதிபர் யாழ்ப்பாணம் அவர்களால் மூடிய கேள்விகள் இக்ராட் ஒப்பந்தக்காரரிடமிருந்தும் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களிடமிருந்தும் கோரப்படுகின்றன.
3. மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு கோள்விக்கும் ரூபா 500 ப்படி பணமாக அல்லது மாநகர ஆணையாளர் பெயருக்கு மாற்றக் கூடியதான காசுக் கட்டளை/ வங்கி ஓலை ஆக யாழ் மாநகர ஆணையாளரிடம் சமர்ப்பித்து கேள்விப் பத்திரங்களை அவரிடம் 09.09.2004 இல் இருந்து 20.09.2004 பிற்பகல் 15.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.
4. கேள்வி தரகர்கள் வேலை நேரங்களில் மாநகர சபை 'வேலைகள் பொறியியலாளர்' காரியாலயத்தில் கேள்விப் பத்திரங்களை இலவசமாகப் பார்வையிட்டு மேலதிக விபரங்களையும் பெறலாம்.
5. சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் யாவும் அவை திறக்கப்படும் தினத்தில் இருந்து 90 நாட்களுக்கு செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். அத்துடன் யாழ்ப்பாண மாவட்ட செயலாளரின் பெயரில் எடுக்கப்பட்ட கேள்விப் பிணைப்பத்திரமும் இணைக்கப்பட்டு 'மாவட்ட செயலாளர்/அரச அதிபர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்' என்ற முகவரிக்கு தனித்தனி உறைகளில் இடப்பட்டு 22.09.2004 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக் கூடியதாக அனுப்புதல் வேண்டும். இதற்கென அலுவலகத்தில் புனர்வாழ்வுப்பகுதி கணக்காளரின் அறையில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியிலும் இடப்படலாம். கேள்விப் பத்திரத்தைக் கொண்டுள்ள கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் குறிப்பிடுதல் வேண்டும்.
6. அதே தினம் 15.00 மணிக்கு கேள்விகள் யாவும் அரசாங்க அதிபர் முன்னிலையில் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவரின் பிரதிநிதி சமுகமளிக்கலாம்.

## வேலைத்திட்டம் 01 சிறுகுளங்களைப் புனரமைத்தல் விபர அட்டவணை

| | வேலையின் பெயர் | இக்கராட் நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்டுள்ள ஆகக் குறைந்த தரம் | மீளளிக்க கூடிய கேள்விப்பத்திரப் பிணை வைப்புப் பணம் | மீளளிக்கப் படாத பணம் வற் வரி உட்பட |
|---|---|---|---|---|
| 1 | நெடுங்குளம், கொழும்புத்துறை கிழக்கு (JPO/WC/PO/1/03) | 09 | 6,000.00 | 500.00 |
| 2 | உப்புக்குளம், கொழும்புத்துறை கிழக்கு (JPO/WC/PO/1/05) | 09 | 7,500.00 | 500.00 |
| 3 | பால்குளம், சுண்டுக்குளி (JPO/WC/PO/1/10) | 09 | 11,500.00 | 500.00 |
| 4 | மறவக்குளம், சுண்டுக்குளி (JPO/WC/PO/1/11) | 09 | 6,000.00 | 500.00 |
| 5 | மூண்டுக்குளம், குருநகர் (JPO/WC/PO/1/13) | 09 | 9,000.00 | 500.00 |
| 6 | தேவரிக்குளம், மடத்தடி, குருநகர் (JPO/WC/PO/1/14) | 09 | 17,000.00 | 500.00 |
| 7 | புல்லுக்குளம் (கட்டம் 01) வண்ணார்பண்ணை தென்கிழக்கு (JPO/WC/PO/1/15) | 09 | 25,000.00 | 500.00 |
| 8 | கன்னாதிட்டிக்குளம் வண்ணார்பண்ணை தென்கிழக்கு (JPO/WC/PO/1/18) | 09 | 26,000.00 | 500.00 |
| 9 | கற்குளம் வண்ணார்பண்ணை தென்மேற்கு (JPO/WC/PO/1/19) | 09 | 3,000.00 | 500.00 |
| 10 | நாச்சிமார் கோயில்குளம், வண்ணார்பண்ணை வடமேற்கு (JPO/WC/PO/1/25) | 09 | 5,000.00 | 500.00 |
| 11 | ஆரியகுளம் (கட்டு 01) வண்ணார்பண்ணை தென்கிழக்கு (JPO/WC/PO/1/30) | 09 | 21,000.00 | 500.00 |
| 12 | பிராமணகட்டு குளம், நல்லூர் தெற்கு (JPO/WC/PO/1/31) | 09 | 23,000.00 | 500.00 |
| 13 | நரியன் குண்டுக்குளம், வண்ணார்பண்ணை வடகிழக்கு (JPO/WC/PO/1/43) | 09 | 4,000.00 | 500.00 |
| 14 | வண்ணான் குளம், கொழும்புத்துறை கிழக்கு (JPO/WC/PO/1/04) | 09 | 10,000.00 | 500.00 |
| 15 | நீர்நொச்சி தாழ்வுக்குளம், அரியலை மத்தி (JPO/WC/PO/1/36) | 09 | 13,000.00 | 500.00 |

### வேலைத் திட்டம் 2 கூட்டெரு தயாரிக்கும் ஆலை, காக்கைதீவு திடல் விபர அட்டவணை

| | வேலையின் பெயர் | இக்கராட் நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்டுள்ள ஆகக் குறைந்த தரம் | மீளளிக்கக் கூடிய கேள்விப்பத்திரப் பிணை வைப்புப் பணம் | மீளளிக்கப் படாத பணம் வற் வரி உட்பட |
|---|---|---|---|---|
| 1 | கூட்டெரு தயாரிக்கும் கட்டடம் அலுவலக/ களஞ்சிய கட்டடம் (கட்டம் 01) (JPO/WC.SW/1/01) | 09 | 34,000.00 | 1000.00 |

07.09.2004
மாவட்ட செயலகம்
யாழ்ப்பாணம்.

**செ.பத்மநாதன்**
மாவட்ட செயலகம/அரசாங்க அதிபர்
கேளிவிச்சபைத்தலைவா/யாழ்ப்பாணம்.

(C-3064)

## யாழ்.செயலகத்தில் குடிநீர் தொடர்பான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்துக்கான, குடிநீர் விநியோகத்திட்டங்கள் தொடர்பாக ஆராய்வதற்கான விசேட கலந்துரையாடலொன்று இன்று யாழ்.செயலகத்தில் அரச அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது.

தேசிய குடிநீர் வழங்கல் அதிகாரசபையினால் முன்னெடுக்கப்பட்டு வரும் குடிநீர் விநியோகத்திட்டங்கள் தொடர்பாகவும், மற்றும் சர்வதேச உதவி அமைப்புக்களின் உதவியுடன் மீள இயக்கப்பட்ட குடிநீர் விநியோகத் திட்டங்கள் தொடர்பாகவும் ஆராய திணைக்களங்கள் உள்ளூராட்சிமன்ற தலைவர்கள், சர்வதேச தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகள் அழைக்கப்பட்டுள்ளனர்.(17)


## வீடு தேவை

மாவட்ட சிறுவர் பாதுகாப்புக்குழு காரியாலய உபயோகத்துக்காக உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலை வீதி அல்லது அதன சுற்றாடலில் ஓர் வீடு வாடகைக்கு அல்லது குத்தகைகு தேவையாக உள்ளது. இது சம்பந்தமாகத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி : *இணைப்பாளர்,*
மாவட்ட சிறுவர் பாதுகாப்புக்குழு,
அறை எண் - 30,
யாழ்.போதனா வைத்தியசாலை,
தொ.பே. இல : 2225657
(925)



## சிறு விளம்பரம்

### முகமதி கிறைண்டிங் மில்

வெள்ளைப் பிட்டுக்கலவை, சிவப்புப் பிட்டுக்கலவை, திடீர் தோசைக் கலவை, திடீர் அப்பக் கலவை ஆகிய வற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள - முகமதி கிறைண்டிங் மில்ஸ் அன் ஸ்ரோர்ஸ். இல : 777, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் (C/3022)


## பாராட்டு விழா

பருத்தித்துறை வட.இந்து மகளிர் கல்லூரி அதிபர் செல்வி அ. கனகரத்தினம் ஓய்வுபெற்று செல்வதையடுத்து அவரைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று பிற்பகல் 4.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. கல்லூரியின் அபிவிருத்திச்சங் கம் இதற்கான ஏற்பாட்டை செய்துள்ளது.(12)


நாகம்ஸ் சுன்னாகம்

இன்று
தனுஷ், சிந்து
கருணாஸ் ம
மணிவண்ணன்
நடித்த



தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)

ராஜா யாழ்ப்பாணம்.

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு

விஜய், சோனியா அகர்வால், வடிவேல் நடித்த

மதுர



காட்சிநேரம் 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

ரிக்கெட் முற்பதிவு செய்துகொள்ளலாம்

(சி-2725)

நிறஞ்சனாஸ் சங்கானை

பிரசாந், மீனா, சுஹாசினி நடித்த



ஷாக்

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)

காட்சி நேரம்: 11.00.2.45.6.00 (பு.நே.)

Strike Force

(சி-2723)



6 மாதம் யாழ்ப்பாணத்தில் M.M.I.C 20 % கழிவு

வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைசார்
தபால்மூலம் கற்கைநெறி

Diploma in Massemedia
Dip.in.m.m.(Sri lanka) சான்றிதழ்

இல.15, சிறாம்பியடி லேன், மணியம் பில்டிங்,
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (C-3065) Call: 0777316258


## நல்லைக் குமரன் வெளியீட்டு விழா

இடம் - நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபம்
காலம - 09.09.2004 வியாழக்கிழமை காலை 10.00 மணி
தலைவர் - கலாநிதி க.குணராசா
*மாநகர ஆணையாளரும்*
*சைவசமய விவகாரக் குழுவின் தலைவரும்*
ஆய்வுரை - திரு.க.சிவராமலிங்கம்
*முன்னாள் பிரதி அதிபர்,*
*யாழ்.இந்துக்கல்லூரி*

மேற்படி விழாவில் பங்குகொண்டு பயனுள்ள பல ஆக்கங்களைத் தன்னகத்தே தாங்கி வெளிவரும் நல்லைக் குமரன் மலரினைப் படித்துப் பயன்பெறுமாறு ஆர்வலர்கள் அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

சைவசமய விவகாரக்குழு
யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்.

(சி-3041)

## நன்றி தெரிவிக்கின்றோம்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன அனுசரணையுடன் விவசாய திணைக்களமும், கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களமும் இணைந்து நடாத்திய பொருணமிய கண்காட்சி 01.09.2004 - 05.09.2004 வரையான 5 தினங்களும் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

மேற்படி கண்காட்சி நிகழ்விற்கும், கலைநிகழ்வுகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய வன்னி வேளாண் சேவை நிறுவனம், நியாப் கைத்தொழில்சார் நிறுவனங்கள், கமநல சேவைத் திணைக்களங்கள், யாழ்.பல்கலைக்கழக விவசாய பீடம், விஞ்ஞான பீடம், கமக்கார அமைப்புக்கள் மற்றும் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார் உள்ளிட்ட அனைத்து மாவட்டங்களின் பாடசாலை அதிபர், ஆசிரியர், மாணவர்கள் மற்றும் விவசாயிகள், பொதுநலன் விரும்பிகள் அனைவருக்கும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரும், கண்காட்சி ஏற்பாட்டுக் குழுவினரும் நன்றி தெரிவித்துக்கொள்கின்றோம்.

நன்றி

(சி-2842)

# கனடாவின் பொங்குதமிழ் நிகழ்வுகளுக்கு
# ஏனைய நாட்டுத் தமிழர்களுக்கும் அழைப்பு

கனடா ரொறன்ரோவில் ஒன்ராறியோ மாகாணப் நாடாளுமன்றத் திடலில் எதிர்வரும் 25 ஆம் திகதி பொங்குதமிழ் நிகழ்வுகள் வெகு சிறப்பாக நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பல்லின சமுதாயக் கட்டமைப்பைக் கொண்ட கனேடிய தேசத்தின் பிரதான நீரோட்டத்தின் உறுதியான சக்தியாக தம்மை அடையாளப்படுத்தவும், தாயகத் தமிழர்களுடனான தமது உறவுப் பேணலை வெளிப்படுத்தவும் நடைபெறும் இந்த நிகழ்வுகளில் ஏனைய நாடுகளில் வசிக்கும் தமிழர்களையும் கலந்துகொள்ளுமாறு கனடா தமிழ் மாணவர் அமைப்பு அழைப்பு விடுத்துள்ளது.

தமிழர் தேசியம், தமிழர் தலைமை, தமிழர் தாயகம், சுய நிர்ணயம் போன்ற பொங்குதமிழின் அடிப்படைகளை மீண்டுமொரு முறை உறுதிப்படுத்தும் இந் நிகழ்வில், குறிப்பாக ஏனைய நாடுகளிலுள்ள தமிழ் மாணவர் அமைப்புக்கள் மற்றும் தமிழர் நல அமைப்புக்கள் பொதுமக்களும் கலந்து கொண்டு, தமது ஆதரவை வழங்குமாறே விழா ஒருங்கிணைப்புக்குழு அமைப்பாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

இதேவேளை - வாழ்த்துச் செய்திகளையும், பொங்குதமிழ் ஆக்கங்களையும் வழங்க விரும்புபவர்களும், விழா அமைப்பாளர்களுடன் தொடர்பு கொண்டு அதனை வழங்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுபற்றிய விபரங்களுக்கு - 416.817.4379 அல்லது 416.648.4456 என்ற தொலைபேசி இலககங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

சுமார் 3 லட்சம் பேரைக் கொண்டுள்ள கனேடியத் தமிழ்ச் சமுதாயம் இந்த நிகழ்வு மூலம் காத்திரமான ஒரு சமுதாயமாக ஒரே தலைமையின் கீழ்த் தம்மைப் பிரகடனப்படுத்தி, தற்போது சர்வதேச ஆதரவுடன் முன்னெடுக்கப்படும் பேச்சுவார்த்தைகளில் காத்திரமான பங்கு வழங்கவேண்டிய கடப்பாடு கனேடிய அரசுக்குத் தெரிவிக்கும் ஒரு நிகழ்வாகவே இதனை முன்னெடுத்து வருகிறது.

## கடற்தொழிலாளர்களுக்கு உபகரணங்கள் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

இந்தியாவிலிருந்து வந்து, யாழ்.பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் மீளக் குடியேறியுள்ள 11 குடும்பங்களுக்கு ஐ.ஓ.எம். நிறுவனத்தினர் கடற்றொழில் உபகரணங்களை வழங்கி உதவியுள்ளனர்.

இந்த உதவி யாழ்.பிரதேச செயலர் பிரிவினுள் மீளக் குடியமர்ந்தவர்களுக்கே கிடைத்துள்ளது. இந்த உதவி வழங்கும் நிகழ்வு நேற்றுக் காலை 10 மணியளவில் யாழ்.பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இதில் யாழ். பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் நடராஜா சுப்பிரமணியம், ஐ.ஓ.எம். நிறுவன அதிகாரிகள், கிராம சேவையாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

மீனவர்கள் தமது தொழில் முயற்சியில் ஈடுபடுவதற்கேற்ற வகையில் வலை, கயிறு உள்ளிட்ட உபகரணங்களே அவர்களுக்கு வழங்கப்பட்டன.

தொடர்ந்தும், ஐ.ஓ.எம்.நிறுவனம் இவ்வாறான உதவிகளை வழங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ப)

## வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு போதை வஸ்துகள் கடத்தல்!

கொழும்பிலுள்ள அரசாங்க அச்சகத்தின் ஊடாக, வெலிக்கடை சிறைச்சாலைக்கு போதைவஸ்து கடத்தப்படுவதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

அண்மையில் அரசாங்க அச்சகக் காணியில் கஞ்சா கைப்பற்றப்பட்டமையை அடுத்தே, இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.

வெலிக்கடைச்சிறைச்சாலையில் இருந்து விடுதலைபெற்று, அரசாங்க அச்சகத்தில் பணியாற்றுவோரே இதில் சம்பந்தப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

## பெயர் வெளிவராத பட்டதாரிகள் செயலகங்களுடன் தொடர்பு கொள்ளவும்

பட்டதாரிகள் பயிற்சிக்கான பெயர்ப் பட்டியலில் பெயர் வெளிவராத யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் உடனடியாக தத்தமது பிரதேச செயலகங்களினூடாக தமது விபரங்களை நிதி அமைச்சுக்கு அனுப்பிவைக்குமாறு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.கஜேந்திரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் வைத்து நிதியமைச்சர் சரத் அமுனுகமவைச் சந்தித்து, உரையாடிய பின்னர் நமது ஈழநாட்டுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் இது குறித்து மேலும் தெரிவித்ததாவது -

வேலையற்ற பட்டதாரிகளை அரச சேவையில் உள்ளீர்த்துக் கொள்வதற்காக அரசாங்கத்தால் பயிற்சியளிக்கும் பொருட்டு, வெளியிடப்பட்ட பெயர்ப் பட்டியலில் தவறவிடப்பட்ட யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் குறித்து நேற்று நாம் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் வைத்து நிதி அமைச்சர் சரத் அமுனுகமவைச் சந்தித்து உரையாடினோம்.

அந்தவேளையில், அவர் இவ்வாறு தவறவிடப்பட்ட பட்டதாரிகளின் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயும் பொருட்டு விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அந்தக் குழுவிடம் கிடைக்கத்தக்க வகையில் பாதிக்கப்பட்ட பட்டதாரிகள் தமது விபரங்களை அவர்களது பிரதேச செயலர்களினூடாக எமக்கு அனுப்பிவைக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

எனவே, பாதிக்கப்பட்ட பட்டதாரிகள் தமது பெயர் விபரங்களை உடனடியாகத் தமது பிரதேச செயலகங்களினூடாக அல்லது யாழ். செயலகத்தினூடாக நிதி அமைச்சுக்கு அனுப்பிவைத்தல் வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ப)

## இரத்மலானை விமான நிலையம் சர்வதேச விமான நிலையமாகும்

அடுத்த வருடத்திலிருந்து இரத்மலானை விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக மாற்றுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்காக அமெரிக்கா மற்றும் இந்திய அரசுகளின் உதவிகள் பெற்றுக்கொள்ளப்படவுள்ளதாகவும் அரசாங்கப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

தற்போது கட்டுநாயக்க விமான நிலையத்தில், விமானங்களைத் தரையிறக்குவதில் ஏற்பட்டுள்ள இட நெருக்கடிகளாலேயே இரத்மலானை விமான நிலையத்தைச் சர்வதேச விமான நிலையமாக மாற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதைத்தவிர அடுத்த ஆண்டு ஒக்ரோபர் மாதத்திலிருந்து, கட்டுநாயக்க விமான நிலைய, வட்டச் சுற்று எல்லையில் அமைந்துள்ள கட்டடங்களிலிருந்து, விமானங்களுக்கு ஏறக்கூடிய பதின்நான்கும் விமானப் பாலங்கள் விரைவாக அமைக்கப்படவுள்ளது.

இதேபோன்று, அடுத்த மாதம் கட்டுநாயக்க விமான நிலையத்தில் புதிய இறங்கு முற்றம் ஒன்று ஜனாதிபதி சந்திரிகாவினால் திறந்து வைக்கப்படவுள்ளதாகவும் அரசாங்கப் பேச்சாளர் தெரிவித்தார்

இந்தச் செயற்பாடுகளுக்கு மேலதிகமாகக் கட்டுநாயக்க விமான நிலையத்தை முழுவதுமாகவே நவீன மயப்படுத்த வேண்டுமென ஜனாதிபதி சந்திரிகாவினால், சிவில் விமான சேவை அமைச்சுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. (தே)




அண்மையில் யாழ்.குடாநாட்டுக்கு விஜயம் மேற்கொண்ட இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சாந்தகொட்டே கொடவை யாழ்.குடாவுக்கான கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் பலாலி விமான நிலையத்தில் கைலாகு கொடுத்து வரவேற்றதைக் காணலாம்.

## எதிர்க்கட்சியுடன் இணைந்து செயற்பட சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானம்

(கொழும்பு)

அரசாங்கத்துடன் இணையாது எதிர்க்கட்சியுடன் இருந்து நடவடிக்கைகளை எடுப்பதற்கு முஸ்லிம் காங்கிரஸின் செயற்குழு தீர்மானித்துள்ளது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அரசுக்கு ஆதரவைத் தெரிவித்ததன் பின்னர், தோன்றியுள்ள அரசியல் நிலவரத்தையடுத்து, முஸ்லிம் காங்கிரஸின் நிலைப்பாடு எப்படி அமையவுள்ளது என்பது பற்றி ஆராய அந்தக் குழு நேற்று முன் தினம் அவசரமாகக் கூடியது.

இந்தக் கூட்டத்தில் தீர்க்கமாக ஆராய்ந்த பின்னரே முஸ்லிம் காங்கிரஸ் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

அரசியலமைப்பைத் திருத்தி அமைக்காமை மற்றும் சமாதானப் பேச்சுவார்த்தைகளின்போது, முஸ்லிம் மக்களைத் தனித்தரப்பாக ஏற்றுக்கொள்ளுதல் போன்ற தீர்மானங்களை ஏற்றுக்கொண்டால் மாத்திரமே, அரசுக்கு ஆதரவு வழங்குவதற்குத் தமது கட்சி இதற்கு முன்னர் தீர்மானித்திருந்ததாகவும், அந்தத் தீர்மானத்தில் எந்தவித மாற்றமும் இல்லை எனவும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் ஹசன் அலி தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய அரசியல் நிலவரம் தொடர்பாகவும் இந்தக் கூட்டத்தில் ஆழமாக ஆராயப்பட்டது. (தே)


## ஊர்காவற்படையினரை விடுவிப்பதாயின் இரு போராளிகளையும் விடுவிக்கவும்
### விடுதலைப் புலிகள் கோரிக்கை

திருகோணமலையில் தம்மால் கைது செய்யப்பட்டுள்ள இரண்டு ஊர்காவற்படையினரை விடுதலை செய்ய வேண்டுமானால், படையினர் வசமுள்ள தமது இரண்டு போராளிகளும் விடுதலை செய்யப்பட வேண்டுமெனத் தமிழீழ விடுதலைப் புலிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் ஊடாகவே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. விடுதலைப் புலிகளின் இந்தக் கோரிக்கை தொடர்பாக தாம் இன்னமும் அரசாங்கத்தின் சமாதானச் செயலகத்துக்கு அறிவிக்கவில்லை எனத் தெரிவித்துள்ள போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு, இந்தப் பிரச்சினைக்கு இலகுவான முறையில் தீர்வு காண்பதற்குத் தாம் தீர்மானித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

இதேவேளை - விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படும் ஊர்காவற்படையினர் இருவரும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை தமிழீழ நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## தன்னாட்சி அதிகார சபையை வழங்குவது இனப்பிரச்சினையில் இறுதித் தீர்வாக அமையாது
### விஜித ஹேரத் தெரிவிப்பு



இலங்கையின் இனப்பிரச்சினைக்கான இறுதித் தீர்வு இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை வழங்குவதனால் கிடையாது என, ஜே.வி.பியின் உயர்பீட உறுப்பினரும், அமைச்சருமான விஜித ஹேரத் தெரிவித்தார்.

இந்தியப் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் கருத்து வெளியிட்டுள்ள அவர் -

இறுதித் தீர்வுக்கான பேச்சுவார்த்தையின் ஒரு அங்கமாக மட்டுமே இடைக்கால தன்னாட்சி அதிகார சபையோசனை இருக்க முடியும்.

தமிழீழ விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால தன்னாட்சி அதிகார யோசனைகளை ஜே.வி.பி நிராகரிக்கிறது.

மட்டுப்படுத்தப்பட்ட வகையில் அதிகாரப் பரவலாக்கத்தையும் நிர்வாகப் பரவலாக்கத்தையும் வழங்குவது தமிழீழ விடுதலைப் புலிகளுடனான முரண்பாட்டைத் தீர்ப்பதற்கு வழிவகுக்கும். எது எப்படியிருப்பினும், இறுதித் தீர்வுக்கான முடிவைப் பேச்சுவார்த்தை மேசையிலேயே தர்மானிக்க முடியும்.

இதேவேளை - 2000 ஆம் ஆண்டளவில் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க முன் வைத்த பிராந்திய ரீதியிலான அதிகாரப் பரவலாக்கத்தை ஜே.வி.பி. ஏற்றுக் கொள்கின்றதா எனக் கேட்ட மற்றுமொரு கேள்விக்குப் பதிலளித்த விஜிதஹேரத், ஜனாதிபதியால் முன்வைக்கப்பட்ட அந்தத் திட்டத்தை தமிழீழ விடுதலைப் புலிகளும் அந்த நேரத்தில் நிராகரித்திருந்தனர்.

இதேவேளை - இலங்கையின் இனப்பிரச்சினை குறித்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தொடர் கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளது, பெரும் பான்மை மக்கள் ஏற்றுக் கொள்ளும் தீர்வின் அடிப்படையில் நிரந்தர தீர்வு காண்பதறகு ஜே.வி.பி.தயாராகவே இருக்கிறது.

இந்த நிலையில் நாட்டைப் பிளவு படுத்தும் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையின் அடிப்படையிலான தீர்வு யோசனையைத் தவிர்த்து ஒன்று பட்ட இலங்கையின் அடிப்படையில் பேச்சுவார்த்தையினூடாகத் தீர்வைக் காண ஜே.வி.பி.தயாராகவே இருக்கிறது எனவும் அவர் தெரிவித்தார்.

# உலகக் கிண்ண உதைபந்தாட்டம்
# தகுதிச் சுற்றில் பிரேசில் வெற்றி!



(பிரேசில்)

உலகக் கிண்ண உதைபந்தாட்ட தகுதிச் சுற்றில் பிரேசில் அணி பொலிவியாவை 3:1 என்ற கோல் கணக்கில் மிக எளிதாக வென்றது. 2006 இல் ஜேர்மனியில் உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டி நடைபெறவுள்ளது. இதற்கான தகுதிச் சுற்றுப் போட்டி நடைபெற்று வருகிறது. தென் அமெரிக்க அணிகள் இடையிலான போட்டியில் நேற்றுமுன்தினம் ஐந்து முறை சம்பியனான பிரேசில் அணி பொலிவியாவைச் சந்தித்தது.

ஆட்டம் துவங்கிய முதல் நிமிடத்திலேயே பிரேசிலின் நட்சத்திர வீரரான ரொனால்டோ 'கோணர் கிக்' மூலம் பந்தைப் பெற்று கம்பத்துக்குள் அடிக்க, அரங்கில் இருந்த 72 ஆயிரம் பிரேசில் ரசிகர்கள் கரகோஷம் எழுப்பி மகிழ்ந்தனர்.

12 ஆவது நிமிடத்தில் பிரேசிலின் கப்டன் ரொபர்ட்டோ கார்லோஸ் 'பிரி கிக்' வாய்ப்பில் பந்தை அடித்தார். அப்போது பொலிவிய தற்காப்புப் பகுதி வீரர் கிறிஸ்டால்டோ பிரேசிலின் ரோக்கா ஜூனியரைப் பிடித்துத் தள்ளிவிட்டார். உடனே நடுவர் பனால்டி கொடுத்தார்.

இந்த வாய்ப்பில் ரொனால்டினோ ஒரு அற்புத கோல் அடித்து அசத்தினார். முதற்பாதி ஆட்டம் முடிய ஒரு நிமிடம் (44 ஆவது நிமிடம்) இருக்கும்போது, அட்ரியானோ தலையால் முட்டி ஒரு கோல் அடிக்க, பிரேசில் 3:0 என்ற கோல் கணக்கில் வலுவான முன்னிலை பெற்றது.

49 ஆவது நிமிடத்தில் பொலிவியாவின் கிறிஸ்டால்டோ அடித்த 'ஷொட்டை'த் தடுக்க முயன்றார் பிரேசிலின் எட் மில்சன். ஆனால், பந்து கோல் கம்பத்துக்குள் சென்றுவிட 'சேம் சைட்' கோலாக மாறியது.

இதையடுத்து பொலிவியா ஒரு கோல் பெற்றது. இறுதியில் 3:1 என்ற கோல் கணக்கில் பிரேசில் அபார வெற்றிபெற்றது. தற்போது பிரேசில் 16 புள்ளிகளுடன் முன்னிலை வகிக்கிறது. அடுத்த இடத்தில் ஆர்ஜென்ரீனா 15 புள்ளிகளுடன் உள்ளது.

மற்றய போட்டிகளில் உருகுவே அணி ஈகுவடோரை 1:0 என்ற கோல் கணக்கில் வென்றது. ஏதென்ஸ் ஒலிம்பிக்கில் வெள்ளி வென்ற பரகுவே அணி, வெனிசுலாவை 1:0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது. கொலம்பியா, சிலி அணிகளுக்கிடையிலான போட்டி கோல் எதுவும் அடிக்கப்படாமல் சமநிலையில் முடிந்தது.

ஆபிரிக்க பகுதிக்கான தகுதிச் சுற்றில் எகிப்து அணி - கமரூனை 3:2 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது. 'சூப்பர் ஈகிள்ஸ்' என்று வர்ணிக்கப்படும் நைஜீரிய அணி - சிம்பாப்வேயை 3:0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது. ஹொங்கோ அணி - தென்னாபிரிக்காவை 1:0 என்ற கோல் கணக்கில் வென்றது. தற்போது ஆபிரிக்க அணிகளில் கானா, ஹொங்கோ ஆகியன தலா 7 புள்ளிகளுடன் முதல் இடத்தைப் பகிர்ந்து கொண்டுள்ளன.

## தென்மராட்சி வலயமட்ட உதைபந்தாட்டத்தில் இன்று!

தென்மராட்சி வலயமட்ட உதைபந்தாட்டப் போட்டிகள் நேற்றுமுதல் நடைபெற்றுவருகின்றன. இந்தப் போட்டிகளில் இன்று நடைபெறவிருக்கும் ஆட்டங்களும், இதில் பங்குபெறவிருக்கும் பாடசாலைகளின் விபரங்களும் வருமாறு -

12 வயதுப் பிரிவில் -

கொடிகாமம் அ.த.க. மைதானத்தில் - பிற்பகல் 1.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியை எதிர்த்து வரணி மகாவித்தியாலயமும், பிற்பகல் 2 மணிக்கு வீரசிங்கம் மகா வித்தியாலயத்தை எதிர்த்து கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயமும் மோதவுள்ளன.

மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் - பிற்பகல் 1.30 மணிக்கு நாவற்குழி மகாவித்தியாலயத்தை எதிர்த்து, மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயமும், பிற்பகல் 2 மணிக்கு சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயத்தை எதிர்த்து கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயமும் மோதவுள்ளன.

14 வயதுப் பிரிவில் -

கொடிகாமம் அ.த.க. மைதானத்தில் - இன்று பிற்பகல் 2.30 மணிக்கு வரணி மகா வித்தியாலயத்தை எதிர்த்து இடைக்குறிச்சி சிறி சுப்பிரமணிய வித்தி யாலயமும், பிற்பகல் 3.15 மணிக்கு கச்சாய் அ.த.க.பாடசாலையை எதிர்த்து கொடிகாமம் அ.த.க. பாடசாலையும் மோதவுள்ளன.

வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் பிற்பகல் 2.30 மணியளவில் கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயத்தை எதிர்த்து சாவகச்சேரி இந்துக் கல்லூரியும், பிற்பகல் 3.15 மணிக்கு சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயத்தை எதிர்த்து சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியும் மோதவிருக்கின்றன.




# அவுஸ்ரேலியாவுடனான போட்டியில் சச்சின் டெண்டுல்கர் விளையாடுவார்

## பயிற்சியாளர் நம்பிக்கை

(லண்டன்)



அவுஸ்ரேலியா தொடரில் டெண்டுல்கர் ஆடுவார் என்று பயிற்சியாளர் ஜோன்ரைட் நம்பிக்கை தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் கூறும்போது -

டெண்டுல்கருக்கு மீண்டும் ஒருமுறை ஸ்கான் எடுக்கப்பட்டுள்ளது. அவுஸ்ரேலியத் தொடர் முக்கியமானது. இந்தத் தொடருக்கு அவர் உடல் தகுதி பெறுவார் என்ற நம்பிக்கை உள்ளது என்றார்.

லண்டனில் இருக்கும் டெண்டுல்கர் இதுவரை நாடு திரும்பவில்லை. அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணி செப்ரெம்பர் 30 ஆம் திகதி முதல் நவம்பர் 7 ஆம் திகதிவரை இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்து 4 டெஸ்ட் மற்றும் 3 நாள் ஆட்டத்தில் விளையாடவுள்ளது.

முதல் டெஸ்ட் ஒக்ரோபர் 6 தொடக்கம் 10ஆம் திகதி வரை பெங்களூரிலும், 2 ஆவது டெஸ்ட் ஒக்ரோபர் 14 தொடக்கம் 18 ஆம் திகதிவரை சென்னையிலும் 3 ஆவது டெஸ்ட் 26 தொடக்கம் 30 ஆம் திகதிவரை நாக்பூரிலும், கடைசி டெஸ்ட் நவம்பர் 3 தொடக்கம் 7 ஆம் திகதி வரை மும்பையிலும் நடைபெறுகிறது.

### தேசிய மட்ட உடற்பயிற்சி

## தமிழ்ப் பகுதி பாடசாலைகள் முக்கிய இடங்களை பெற்றன!

கொழும்பு சென் அன்ரனீஸ் தேசியக் கல்லூரி மைதானத்தில் மாகாணமட்டத்தில் தெரிவான பாடசாலைகளுக்கிடையேயான தேசிய மட்ட உடற்பயிற்சிப் போட்டிகள் கடந்த 4 ஆம் திகதி நடைபெற்றன.

இதில் பெண்களுக்கான உடற்பயிற்சிப் போட்டியில் முதலாம் இடத்தை களுத்துறை பெண்கள் மகா வித்தியாலயமும், 2 ஆம் இடத்தை வவுனியா றம்பைக்குளம் பெண்கள் பாடசாலையும், 3 ஆம் இடத்தை கிளிநொச்சி ராமநாதபுரம் மகாவித்தியாலயமும் பெற்றுக் கொண்டன. உடுவில் மகளிர் கல்லூரி 5 ஆம் இடத்தைப் பெற்றது.

ஆண்கள் பிரிவில் முதல் 3 இடங்களையும் சிங்களப் பாடசாலைகள் பெற்றபோதும், 5 ஆம், 6 ஆம், 7 ஆம் இடங்களை முறையே ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலயம், முழங்காவில் மகாவித்தியாலயம், யாழ். ஹாட்லிக் கல்லூரி ஆகியன பெற்றுக் கொண்டன. (12)

# உலகக் கிண்ண தகுதி சுற்றுப் போட்டியில் இந்தியா - ஜப்பான் அணிகள் மோதல்!

(கொல்கத்தா)

உலகக் கிண்ண உதைபந்தாட்ட தகுதிச் சுற்றுப்போட்டியில் இந்தியாவும், ஜப்பானும் கொல்கத்தா நகரில் இன்று மோதவிருக்கின்றன.

இந்தியாவிற்கு வருகைதரும் ஜப்பான் அணியில் 23 வீரர்கள் இடம்பெற்றுள்ளனர். இதில் 5 வீரர்கள் ஐரோப்பிய போட்டிகளில் ஆடிவருகின்றனர்.

இந்திய அணியும் - ஜப்பான் அணியும் இன்று கொல்கத்தாவில் உள்ள சால்ட்லோக் மைதானத்தில் மோதவிருக்கின்றன.

இதில் நகேமுரா மற்றும் அட்சுஹி இருவரும் இத்தாலி லீக் போட்டியில் பங்கு கொண்டு வருகிறார்கள். நகேமுரா ரெஜ்ஜின்களப் பந்துகளையும், அட்கஷி மெசினா ஆடி வருகின்றனர்.

கோல் கீப்பர் கவாகுச்ஷி, யோஷிடா (எப்.சி. வொர்டா ஜீ லாண்ட் - டென்மார்க்), மிட் பீல்டர் ஷிண்ஜிகுனே (பெயனார்டு - ஹொலண்ட்) மற்றும் ஒரு முன்னணி வீரரான மலோஹிரா டகாஹரே (ஹிம்பர்க் - எஸ்.எம். ஜேர்மனி) ஆகியோர் ஐரோப்பிய அணிக்காக ஆடிவரும் மற்ற வீரர்களாவர்.

முன்னதாக உலகக் கோப்பையில் தகுதிச் சுற்றுப் போட்டியில், முதல் கட்டப் போட்டி ஜப்பானில் உள்ள சைட்டமா என்ற இடத்தில் நடைபெற்றது. இதில் ஜப்பான் 7:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

தற்போது முதல் சுற்றுப் போட்டியின் மறு போட்டி கொல்கத்தாவில் உள்ள சால்ட்லேக் அரங்கத்தில் நடைபெறவுள்ளது.

ஆசியாவின் பலம்வாய்ந்த கால்பந்து அணிகளில் ஒன்றான ஜப்பான் அணி, இது வரை நடைபெற்ற உலகக் கோப்பை தகுதிச் சுற்றுப் போட்டிகளில் மொத்தம் 9 புள்ளிகளைப் பெற்றுள்ளது.

இன்னும் ஒரு போட்டியில் வெற்றிபெற்றால், உலகக் கோப்பை கால்பந்துப் போட்டிக்கு முந்தைய இறுதிச் சுற்றுப் போட்டிக்குத் தகுதி பெறும் நிலையில் உள்ளது ஜப்பான்.

இந்தியாவும் இதேயளவு போட்டிகளில் பங்கேற்றபோதிலும், இதுவரை மொத்தம் மூன்று புள்ளிகளை மட்டும் பெற்றுள்ளது.

# நட்வெஸ்ட்டில் பாடம் கற்றோம் ஐ. சி. சி. போட்டியில் சாதிப்போம்!

## கங்கூலி சவால் விடுகிறார்



நட்வெஸ்ட் தொடரை இழந்தது மிகவும் கவலையளிக்கிறது. கடந்த இரண்டு ஆண்டுகளாக இந்திய அணி வெற்றி மேல் வெற்றி பெற்று வந்தது. இப்போது சில போட்டிகளில் தொடர்ந்து தோல்வியடைவது வேதனையை அளிக்கிறது என இந்திய அணித் தலைவர் கங்கூலி தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

நமது அணிக்கு இக்கட்டான நிலையில் வெற்றி இலக்கை எட்டக்கூடிய திறமை தற்போது குறைந்து விட்டது என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். ஷேவாக் சுத்தமாக பார்மில் இல்லை.

சச்சினும் காயம் காரணமாக அணியில் இல்லாததால் ஆரம்பத்தில் பெரும் குழப்பம் ஏற்பட்டது. தொடக்க ஆட்டக்காரர்கள் நிலைத்து நின்று ஆடினால்தான் அடுத்துவரும் வீரர்களும் எந்தவிதமான நெருக்கடியும் இல்லாமல் ஓட்டங்களைக் குவிக்க முடியும். ஆனால், இதை நமது அணி சரியாக செய்யத் தவறியது தோல்விக்கு காரணமாக அமைந்தது.

இந்தத் தொடரில் ஹர்பஜன் சிறப்பாக பந்து வீசினார். அதேபோல் துடுப்பாட்டத்தில் இவர் நன்றாக செயற்பட்டார். ஓவலில் நடந்த இரண்டாவது போட்டியில், அணி தோல்வியை நோக்கி சென்றுகொண்டிருந்த போதும் கடைசி விக்கெட்டுக்கு வந்த ஹர்பஜன் மன உறுதியுடன் ஆடினார்.

இவரது ஆட்டத்தில் இருந்து நாங்கள் புதிய பாடம் கற்றுக் கொண்டுள்ளோம். பிளின்ரொப் நட்சத்திர வீரராக வளர்ச்சி அடைந்துள்ளார். பந்துவீச்சு, துடுப்பாட்டம் இரண்டிலும் நன்றாக செயற்பட்டு வருகின்றார்.

இவரது ஆட்டம் இங்கிலாந்து அணிக்கு கூடுதல் வலு சேர்க்கிறது. இப்போது எங்கள் கவனமெல்லாம் சம்பியன்ஸ் தொடர் மீதுதான். சச்சின் அணியில் இல்லாதது மிகவும் கவலையளிக்கிறது. ஆனாலும் நட்வெஸ்ட் தோல்வியில் நாங்கள் நிறையப் பாடங்கள் கற்றுக் கொண்டுள்ளோம். இதனால் சம்பியன்ஸ் தொடரில் சாதிக்க முடியும் என நம்புகிறேன் என கங்கூலி மேலும் தெரிவித்தார்.

# அமெரிக்க ஓபன் ரெனிஸ் போட்டியில் ஹெனின், வீனஸ் அதிர்ச்சித் தோல்வி!



கிராண்ட்சிலாம் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க ஓபன் ரெனிஸ் போட்டியில், உலகின் முதல்நிலை வீராங்கனையான ஜஸ்டின் ஹெனின் (பெல்ஜியம்) 4 ஆவது சுற்றில் ரஷ்யாவைச் சேர்ந்த நாடியா பெட்ரோவை எதிர்கொண்டார்.

யாருமே எதிர்பாராத வகையில் அதிர்ச்சிகரமாகத் தோற்றார்.

14 ஆம் நிலை வீராங்கனையான பெட்ரோவா 6:3, 6:2 என்ற நேர்செட் கணக்கில் ஹெனினைத் தோற்கடித்து காலிறுதிக்குள் நுழைந்தார்.

இதேபோல 11 ஆம் நிலை வீராங்கனையும், முன்னாள் சம்பியனுமான வீனஸ் வில்லியம்ஸ் அதிர்ச்சிகரமாகத் தோற்றார். டேவன் போர்ட் (அமெரிக்கா) 7:5, 6:4 என்ற நேர் செட் கணக்கில் சகநாட்டவரான வீனஸைத் தோற்கடித்தார்.

மற்ற 4 ஆவது சுற்று ஆட்டங்களில் சுவெட்லனா 7:6, 7:5, 6:2 என்ற நேர் செட் கணக்கில் மேரி பியர்ஸையும், சின்னோபு (ஜப்பான்) 7:6, 7:4, 4:6, 4:3 என்ற செட் கணக்கில்எலீனியையும் (கிரீஸ்) தோற்கடித்தனர்.

பெண்கள் ஒற்றையர் காலிறுதியில் மோதும் வீராங்கனைகள் வருமாறு -




பெட்ரோவா (ரஷ்யா) - சுவெட்லனா (ரஷ்யா), ஷின்னோபு (ஜப்பான்) - டேவன் போர்ட் (அமெரிக்கா), கேப்ரியாட்டி (அமெரிக்கா) - செரீனா வில்லியம்ஸ் (அமெரிக்கா), எலீனா டெமன்டிவா (ரஷ்யா) - அமெய்லி மவ்ரஸ்மோ (பிரான்ஸ்).

# க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை -2004


## விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்

- வளி வெற்றிடம் அல்லது குறைகடத்தியூடாக இலத்திரனை செலுத்தி அதன் இயல்புகளை ஆராயும் பௌதிக விஞ்ஞானம் இலத்திரனியல் எனப்படும்.
- மின் அறிகுறி ஒன்றின் மீது வீச்சு கூட்டப்படல் விரியலாக்கம் எனப்படும் இதற்குப் பயன்படுத்தும் கருவி விரியலாக்கி எனப்படும்.
- சீராக்கம் எனப்படுவது ஆடலோட்ட மின்னோட்டத்தை நேர் ஓட்ட மின்னோட்டமாக மாற்றி பின்னர் அதற்கு ஏற்ப இலத்திரனியல் கருவிகளைப் பாவித்தல் சீராக்கம் எனப்படும்.
- ஆடலோட்டம், நேர்ஓட்டம், சீராக்கப்பட்ட நேர்ஓட்டம் ஆகியவற்றின் அலைவடிவங்கள் பின்வருமாறு அமையும்.



ஆடலோட்டம் A,C - நேர் ஓட்டம் D,C

- குறைகடத்தி, கடத்தியைவிட தடை கூடியதும் காவலியை விட தடை குறைந்ததும் ஆன பொருட்கள் குறைகடத்தி எனப்படும்.
- இத்தன்மை கொண்ட மூலகங்கள் கூட்டம் 4 இல் அமையும் கூட்டம் 4 மூலகங்களில் காபன் (C) ஜேமேனியம் (Ge) என்பன குறைகடத்திகளாகும் இவற்றின் சுற்றோட்டில் 4 இலத்திரன்கள் காணப்படும்.





**குறைகடத்தியை வெப்பமேற்றல்**

- குறைகடத்தியை வெப்பமேற்றும்போது அணுவில் காணப்படும் சுயாதீன இலத்திரன்கள் காலலாக்கப்படும்.
- இவ்வாறு காலலாக்கப்படும் போது இலத்திரன் வெளிச் சென்ற இடத்தில் துளை ஒன்று ஏற்படும் (hole) இதை துளை அல்லது துவாரம் என அழைப்பர்.
- இந்தப்பகுதி நேர் ஏற்றம் கொண்டதாகும். ஆகவே நேர் ஏற்ற இடத்திற்கு இலத்திரன் ஒன்று அருகில் உள்ள இன்னோர் அணுவிலிருந்து செல்லும் அப்போது செல்லும் அணுவில் துளை ஒன்று ஏற்படும்.
- எனவே கடத்தியை வெப்பமேற்றும் போது
  1. வெளியேற்றப்பட்ட சுயாதீன இலத்திரன் அசைவு
  2. துவாரம் காரணமாக இலத்திரன் அசைவாகும்.
- குறைகடத்தியை வேறுவேறான கூட்டங்களுடன் மாறுபடுத்தும்போது (P-வகை குறைகடத்தி, N-வகை குறைகடத்தி) உருவாகின்றன.
- P-வகை குறைகடத்தியை கூட்டம் III மூலகங்களும், சிலிக்கன் சேர்க்கப்படும்போது உருவாகும். இங்கு துவாரங்கள் அதிகமாக காணப்படும்.
- N-வகை குறைகடத்தியை கூட்டம் V மூலகங்களும், சிலிக்கன் சேர்க்கப்படும் போது உருவாகும். இங்கு சுயாதீன இலத்திரன்கள் அதிகமாகக் காணப்படும்.
- இவ்விரண்டும் இணைக்கப்படும் போது (P-N சந்தி) இருவாயி உருவாக்கப்படும். (தொடரும்...)

சி.பாலச்சந்திரன்
வட்டு. திருநாவுக்கரசு வித்தியாலயம்

## தமிழ் மொழியும் இலக்கியமும்

01. பின்வரும் கூற்றுக்கள் ஒவ்வொன்றின் கீழும் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

அ) 'இணைய சிந்தனையென திசயுந் தூன்றலால் வனை பொலன் கழலினாய் வருந்து வேனென...'
i) இக்கூற்று யாரால் கூறப்பட்டது?
ii) யாருக்கு கூறப்பட்டது?
iii) எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?
iv) 'வனைபொலன் கழலினாய்' என்று கூறப்படுபவர் யார்?

ஆ) 'தெய்வநாயகன் திருநகர்க்குச் செல்வழி எவ்வழி யவ்வழி யின்னும் தேர்கிலேன்....'
i) இக்கூற்று யாருக்கு கூறப்பட்டது?
ii) யாரால் கூறப்பட்டது?
iii) எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?
iv) 'தெய்வநாயகன் திருநகர்' எனக் கூறப்படுவது எது?

இ) 'யாரை நீ யவலிக் கின்றன பெருகுமித் துயருனக் குற்ற பெற்றியென் திருகலில் சிந்தையாய் செப்பு'
i) எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?
ii) யாரால் கூறப்பட்டது?
iii) இக்கூற்று யாருக்கு கூறப்பட்டது?
iv) திருகலில் சிந்தையாய் எனக் கூறப்படுவது எது?

02. பின்வரும் செய்யுள்களின் பொருளை இக்கால உரைநடையில் எழுதி அவை ஒவ்வொன்றிலும் காணப்படும் கதாபாத்திரத்தின் துன்பநிலையைத் தருக.

அ) 'ஆயிடைக் கருணைவேந் தானை மீறிய
தீயரைத் தீச்சிறைப்படுத்தல் திண்ணமென்
றேயுமிச் கருதிநாலிம்புக்கின்றதை
ஆயவித் துயர்க் கடலமிழ்ந்தி னேனரோ'

ஆ) 'ஜென்மநாட் டொடங்கியான் செய்த தீவினை
என்முது குளக்குற விறுத்த தாற்புலைக்
கன்மிகள் குழுமுதீக் கடற்கி டாங்கிடை
அம்மையி லமிழ்ந்து மென் றஞ்சு கின்றேன்'

இ) 'உய்வழி யிதுவிதென் றுமுறும் பல்வழி
பொய்வழி யவ்வழி போகு வேனலன்
தெய்வ நாயகன்திரு நகர்க்குச் செல்வழி
எவ்வழி யவ்வழி யின்னும் தேர்கிலேன்'

03. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினை விளக்குக.

i. ஆத்தும விசாரியின் குணவியல்புகள்
ii. குருவான சுவிசேஷகனின் குணவியல்புகள்
iii. இப்பாடத்தினூடாகக் காட்டப்படும் உண்மை என்ன?

04. பின்வரும் வினாக்களில் ஏதேனும் ஒரு வினாவுக்கு விடை தருக.

i. சுவிசேஷகனின் தோற்றமும் இயல்பும் காட்டப்பட்டுள்ள மாற்றத்தைத் தருக?
ii. ஆன்மீகன் தன்னைப் பற்றியும், தனது செயல் பற்றியும் மனக் கவலையுடன் எவ்வாறு சுவிசேஷகனுக்குக் கூறுகின்றான் என்பதைத் தெளிவுபடுத்துக?

05.
i.நற்செய்தியாளன் ஆன்மீகனை அன்புடன் எவ்வாறு உசாவுகின்றான்?
ii.இந்நூலின் கதை எவ்வாறு அமைகின்றது?
iii.குருவானவா "இவ்வுலக வாழ்வில் துன்பம் கண்டும் நீ எதற்காக இறப்பதற்கு அஞ்சுகின்றாய்" எனக் கேட்டதற்கு ஆன்மீகன் கூறிய பதில் என்ன?
iv.'கொல்லத்தக்க துன்பம் வருமுன் சேரவேண்டிய இடத்தை தேடிச் சென்றிடாமல் இருப்பது என்ன? காரணம் பற்றியோ' என குரு கேட்டதற்கு விசாரி கூறிய பதில் என்ன?

P.மாறன்

இங்கே மடிக்கவும்






மாணவர் மலர்

# மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும், மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் 5 மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப்பரீட்சை - 2004

படத்தைப் பார்த்து பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.





01) வித்துக்கள் முளைத்தலுக்கு அவசியமான காரணிகளை அறிய பின்வரும் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.
A.உலர்ந்த சோதனைக் குழாயினுள் கடுகு வித்துக்கள் உண்டு.
B.ஈரப்பஞ்சின் மேல் கடுகு வித்துக்கள் உண்டு
C.ஈரப்பஞ்சின் மேல் வித்துக்கள் இட்டு குளிரேற்றியில் வைத்தல்
D.வித்துக்களில் நீர் அதிகம் விடப்பட்டுள்ளது.
E. கொதி நீரில் அவித்த வித்துக்கள் ஈரமான பஞ்சின் மேல் உண்டு.


1. சில நாட்களின் பின் வித்துக்கள் முளைத்திருந்த தொகுதிக் குழாய் எது? ..........................................

2. சிலநாட்களின் பின் வித்துக்கள் முளைக்காத தொகுதிகள் எவை? ..........................................

3. இந்தப் பரிசோதனையில் வித்து முளைப்பதற்கு அவசியமான காரணிகள் எவை? ..........................................

4. குழாய் A யிலுள்ள வித்துக்கு யாது நிகழ்ந்திருக்கும்.?

02. உமது வகுப்பில் மின்காந்தமொன்றைத் தயாரித்தல் பற்றி நீர் கற்றிருக்கிறீர் அத்தகைய ஒரு மின் காந்தத்தின் படம் கீழே தரப்பட்டிருக்கிறது.





இவ்வரிப்படத்தில் A,B,C எனும் எழுத்துக்களால் குறிக்கப்பட்ட பகுதிகளின் பெயர்களை குறிப்பிடுக.

A: ..........
B :..........
C :..........

02). அடைப்புக்குள் உள்ள சொற்களில் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்து இடைவெளிகளை நிரப்புக.
(மடி, தென்சிலுவை, துருத்தி, மின்சோதிப்பான், நாம்புலு, ஓட்டத்தொடக்க ஒலி எழுப்பும் கருவி)

1) உடுக்கோலங்களில் .............................. ஒன்றாகும்.

2) மின் கசிவுகளைக் கண்டறியப் பயன்படுத்தும் உபகரணம் .............................................................. ஆகும்.

3) வலையில் அகப்படும் மீன்கள் சேரும் மூலை............ ஆகும்.

4) ............ஐ அசைப்பதன் மூலம் கம்மாலைப் பட்டடையில் தீ மூட்டுவார்கள்.

03) பின்வரும் பந்தியினை வாசித்து பொருத்தமான நிறுத்தக் குறியீடுகளை இடுக.

குகன் காட்டு வழியாக தனியே நடந்து வந்து கொண்டிருந்த போது திடீரெனப் பாரிய சத்தம் ஒன்று கேட்டது. ஐயோ என அலறிக் கொண்டு திக்குத் தெரியாமல் ஓடினான். அத்தருணத்தில் நான் ஏன் தனியாக வந்தேன் என எண்ணி வருந்தினான்.

04) மிகச்சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

1. அறுபதாயிரத்துக்கு ஒன்று குறைவாக உள்ள எண்
(1) 59909 (2) 5999 (3) 59999 (4) 59099

2. ஒரு திரையரங்கில் காணப்பட்ட ரசிகர்கள் ஒரு நிரையில் 26 பேர் வீதம் நிரல்களில் இருந்தனர். எனின் அந்தத் திரையரங்கில் குழுமியிருந்த ரசிகர்களின் எண்ணிக்கை யாது?
(1) 104 (2) 140 (3) 338 (4) 228

3. அகலத்தைப் போன்று மூன்று மடங்கு நீளம் கொண்ட ஒரு செவ்வகத்தின் சுற்றளவு 64cm ஆகும். அதன் நீளம் யாது?
(1) 12cm (2) 6cm (3) 18cm (4) 24cm

4. ஒவ்வொன்றும் 75g நிறையுள்ள பக்கற்றுக்களாக 3 3/4 kg தேயிலையில் எத்தனை பக்கற்றுக்கள் அடைக்கலாம்?
(1) 28 (2) 32 (3)40 (5)50

5. ஆறாலும், ஒன்பதாலும் மீதியின்றி வகுக்கக்கூடிய எண்.
(1) 3246 (2) 4563 (3) 3456 (4) 6082

05) தரப்பட்டுள்ள உருக்களுக்கு உரிய பெயர்களைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக?



....................




....................

06) கீழே காணப்படுவது சிறுவன் ஒருவனால் தயாரிக்கப்பட்ட காற்றைப் பயன்படுத்தி விளையாடக் கூடிய விளையாட்டு உபகரணமாகும். இதனைத் தயாரிப்பதற்குத் தேவையான பொருட்களைப் படத்தின் கீழே எழுதுக.




1. ....................
2. ....................
3. ....................
4. ....................
5. ....................



1. ....................
2. ....................
3. ....................
4. ....................
5. ....................

07) கீழே உள்ள படத்தை அவதானித்து வினாக்களுக்கு விடை தருக?





1. வாகனங்கள் நிறுத்தக்கூடாது எனும் வீதிச் சமிக்ஞை எந்த ஆங்கில எழுத்தினால் காட்டப்பட்டுள்ளது.
..........................................

2. முன்னால் பாதசாரிகள் கடவை எந்த ஆங்கில எழுத்தினால் காட்டப்பட்டுள்ளது?
..........................................

3. 'D' என்ற எழுத்தினால் காட்டப்பட்டுள்ள வீதிச் சமிக்ஞை காணப்படும் இடங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
..........................................

4. 'E' என்ற ஆங்கில எழுத்துக் குறிப்பிடும் வீதிச் சமிக்ஞையின் பெயர் யாது?

..........

5. பாதசாரிகள் பின்பற்ற வேண்டிய வீதி விதிகள் இரண்டினைக் குறிப்பிடுக.

i. ..........

ii. ..........


06. G என்ற ஆங்கில எழுத்து குறிப்பிடும் பாதசாரி கடவை காணப்படும் இடங்கள் இரண்டினை எழுதுக.

i. ..........


ii. ..........

08)

1. கீழே உள்ள உருவில் எத்தனை முக்கோணிகளை இனங் காணலாம்.



2. இவ்வுருவில் வெட்டி எடுக்கக்கூடிய முக்கோணிகள் எத்தனை?

09. 


இப்படத்தின் உள்ளேயுள்ள சதுரமானது வெட்டி நீக்கப்பட்டால் எஞ்சிய பகுதியின் பரப்பு எத்தனை சதுர சென்ரிமீற்றராகும்?

10. ஐந்து முகங்களையும் ஆறு உச்சிகளையும் 9 விளிம்புகளையும் கொண்ட திண்ம உரு எது?

..........

11. ஒரு வான் சாரதி முதல் 5 km க்கு 360 ரூபாவும் மேலதிக ஒவ்வொரு கிலோ மீற்றருக்கும் ரூபா25 வீதமும் அறவிடுகின்றான் எனின். அவ்வானில் ஒருவர் 12 km பயணம் செய்ய எவ்வளவு பணம் செலுத்த வேண்டும்.

..........

12. 6x5=11, 8x7 = 15, 10x9 =19 எனின் 6x8x9 இன் பெறுமானம் யாது? ..........

13. 15 எத்தனையாவது முக்கோணி எண்.

..........

14. 550 m வீதிக்கு 50 m இற்கு ஒன்றாக எத்தனை கம்பித் தூண்களை இட முடியும்?

15. 'இனங்களுக்கிடையிலான ஒற்றுமையை வளர்ப்போம்' என்ற தலைப்பில் எழுவாய், பயனிலை இயைபு பொருந்த 4 சொற்களுக்குக் குறையாத 6 வாக்கியங்கள் எழுதுக?

..........

01. பின்வரும் உரைப் பகுதியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

மயூரன் தரம் 5 இல் யாழ்ப்பாணம் புனித ஜோன் பொஸ்கோ கல்லூரியில் படிக்கிறான். அவனது தந்தையார் திரு.அ.யோகரட்ணம் ஒரு ஆசிரிய ஆலோசகர். அவர் யாழ். கோட்டப் பாடசாலைகளில் தரம் 6 முதல் 11 வரை தமிழ்மொழியும் இலக்கியமும் தரம் 12 முதல் 13 வரை தமிழ்மொழிப்பாடத்தையும் மேற்பார்வை செய்கின்றார். அவரது மனைவியின் பெயர் அம்பிகை. அவர் கனடாவில் வேலைசெய்கிறார். ஒருநாள் வலயக் கல்விப் பணிப்பாளரின் வேண்டுகோழுக்கிணங்க யாழ். புனிதயோன் பொஸ்கோ கல்லூரிக்கு தமிழ் பாடத்தை மேற்பார்வை செய்ய ஆசிரிய ஆலோசகர் திரு.அ.யோகரட்ணம் அவரது குழாத்தினரும் சென்றனர். திரு.அ.யோகரட்ணம் தரம் 5 மாணவர்களை மேற்பார்வை செய்து அந்தரங்க அறிக்கையை தயாரித்து யாழ் வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.ப.விக்கினேஸ்வரனிடம் கையளித்தார்.

i) புனிதஜோன் பொஸ்கோ கல்லூரியில் தரம் 5 இல் படிக்கும் மாணவன் யார்? ..........

ii) மயூரனது தந்தையார் பெயரென்ன? ..........

iii) மயூரனது தந்தையாரின் தொழிலென்ன? ..........

iv) மயூரனின் தாயார் பெயரென்ன? ..........

v) மயூரனது தாயார் எந்த நாட்டில் வேலை செய்கிறார்? ..........

vi) யாழ் வலயக்கல்விப் பணிப்பாளரின் பெயரென்ன? ..........

vii) படிக்கிறான் என்பதன் இறந்தகால வடிவம் யாது? ..........

viii) யாழ்வலயம் என்பதைப் பிரித்து எழுதுக?

..........

ix) குழாம் என்பதற்கு ஒத்தசொல் தருக? ..........

x) அந்தரங்கம் என்பதற்கு எதிர்ச்சொல் தருக? ..........

02. பின்வரும் ஆங்கிலச் சொற்களை தமிழில் எழுதுக.

i) Pictures .......... ii) Principal ..........

iii) Library .......... iv) House..........

v) Grand Mother..........

03. பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக.

i) வீடு என்பதற்கு ஒத்த கருத்துள்ள சொல் இரண்டு தருக.

1. .......... 2. ..........

ii) மாம்பழங்கள் என்பதன் ஒருமைச் சொல்லினை எழுதுக.

..........

iii) படிப்பான் என்பதன் இறந்தகால வடிவம் யாது?

..........

iv) இறைவன் என்பதன் பெண்பாற் சொல்லினை எழுதுக.

..........

v) ஓடியாடி விளையாடினார்கள் என்பதன் எழுவாய்ச்சொல்

..........

vi) இன்று காலை .......... பெய்தது. (மலை, மழை)

vii) (ஒழுங்கு படுத்தி எழுதுக.)
இருக்க/ என்னைத்/ முடியாது/ தெரியாதவர்கள/ யாரும்

..........

viii) உயிர் எழுத்துக்கள் எத்தனை?

..........

ix) ! இக்குறியீட்டின் பெயரென்ன?


..........

x) காலப் பெயர்கள் இரண்டினை எழுதுக.

1. .......... 2. ..........

04. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

i) இவ்வெண்சட்டம் காட்டும் எண் யாது?



..........

ii) 4587 = 4000 + .......... +50+ 7 இடைவெளியில் வரவேண்டிய எண் யாது? ..........

iii) 1,3,6,10,15, [ ] 28,36 இவ்வெண்கோலத்தில் வெற்றுக் கூட்டினுள் வரவேண்டிய எண்ணை எழுதுக.

iv) 1 லீற்றர் பாலின் விலை ரூபா 18.00 எனின் 250 ml பாலின் விலை யாது?

..........

இங்கே மடிக்கவும்



| v) | vi) | vii) | viii) |
|---|---|---|---|
| l ml | kg g | | |
| 12 450 | 10 350 | 308 | 8⟌864 |
| + 7 650 | - 4 775 | x 3 | |
| 11 225 | | | |

ix) 49 ஐ உரோமன் இலக்கத்தில் எழுதுக? ..........

x) 1 பெட்டியில் 8 kg பிஸ்கட் இருந்தது. அதில் 5kg 350g பயன்படுத்தப்பட்டது. மீதியாக உள்ளது எவ்வளவு?

..........

05. பின்வரும் காசுக் கட்டளைப் படிவத்தைப் பூரணப் படுத்துக.

**உள்நாட்டுச் சாதாரண காசுக் கட்டளை விண்ணப்பம்**

தொகை ரூபா: .......... சதம்: .......... இல: ..........

1. ரூபா (சொல்லில்) ..........
2. பணம் கொடுபடவேண்டிய இடம் ..........
3. பெறுபவரின் பெயர் .......... (முதலெழுத்துக்களுடன்)
4. அனுப்புபவரின் பெயர் .......... (முதலெழுத்துக்களுடன்)
5. அனுப்புபவரின் முகவரி ..........
6. திகதி .......... .......... கையொப்பம்

06. சுருக்கமான விடை தருக.

i) பூக்களை நாடிவரும் பிராணிகள் இரண்டு தருக?

..........

ii) பானவகைகள் இரண்டினை எழுதுக?

..........

iii) வீட்டு மிருகங்கள் இரண்டினை எழுதுக?

..........

iv) உணவில் அடங்கியுள்ள பிரதான கூறுகள் இரண்டினை எழுதுக.

1. ..........
2. ..........

v) நமது நாட்டிலுள்ள தேசியக் கொடியில் காணப்படும் நிறங்கள் இரண்டினை எழுதுக.

1. ..........
2. ..........

vi) வீதி விபத்துக்களை ஏற்படுத்தும் காரணிகள் இரண்டினைத் தருக.

1. ..........
2. ..........

vii) பூவின் இயல்புகள் இரண்டினை எழுதுக.

1. ..........
2. ..........

viii) நீரினால் ஏற்படும் நோய்கள் இரண்டு தருக?

1. ..........
2. ..........


ix) விதிப்போக்குவரத்துச் சாதனங்கள் இரண்டு தருக.

1. ..........
2. ..........

x) வேலையை இலகுவாக்கப் பயன்படும் பொறிகள் இரண்டு தருக.

1. ..........
2. ..........

07. பின்வரும் படத்தினைப் பார்த்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.



1. இதன் பெயரென்ன?

..........

2. இதன் பாகங்களுக்குப் பெயரிடுக?

..........

3. காந்தத்தின் இரு முனைகளும் எவை?

..........

08. நான் ஒரு தபாற்காரன் என்னும் பொருளில் நான்கு சொற்களுக்குக் குறையாத ஏழு வசனங்கள் எழுதுக.

..........

09. பின்வரும் சுவரொட்டியை வாசித்து அதன் கீழ் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

> 5 வயது முதல் 14 வயது வரையுள்ள பிள்ளைகள் பாடசாலை செல்லவேண்டும். இது அரச பிரகடனம். கல்வியானது எல்லாப் பிள்ளைகளினதும் பிறப்புரிமை என்பதை மறந்து விடாதீர்கள். 'மனித உரிமைகள் அமைப்பு'.

1. இந்தச் சுவரொட்டி எதனைப் பற்றிக் கூறுகிறது?
2. எந்த வயது எல்லைப் பிள்ளைகள் பாடசாலை செல்ல வேண்டும்?
3. இந்தச் சுவரொட்டியில் காணப்படும் இடப் பெயர் ஒன்றினை எழுதுக?
4. 'மறந்து விடாதீர்கள்' எக்காலத்தைக் காட்டுகிறது?
5. இந்தச் சுவரொட்டியை வெளியிட்ட நிறுவனம் எது?
6. 'பிள்ளைகள்' என்பதன் ஒருமைச் சொல்லினை எழுதுக?
7. கல்வி என்பதற்கு ஒத்தசொல் ஒன்று தருக?
8. 'செல்லவேண்டும்' என்பதன் எதிர்மறை வடிவம் யாது?
9. 'பிறப்புரிமை' என்பதைப் பிரித்து எழுதுக?
10. 'பிறப்பு' என்பதற்கு எதிர்ச்சொல் தருக?

T.அம்பிகைபாகன் B.Ed Tamil Sp. Trd ஆசிரிய ஆலோசகர், மேல்மாகாணம்

# சமாதானம் மலரவேண்டும் என்பதில் நாங்கள் அக்கறையாகவே இருக்கிறோம்!

## அகம் – புறம் அங்குரார்ப்பண நிகழ்வில் தமிழினி

**நிரந்தர சமாதானம் மலரவேண்டும் என்பதில் நாம் மிகவும் அக்கறையாக இருக்கின்றோம். வெறுமனே பேச்சளவில் சமாதானத்தைத் தலைப்பாகக் கொண்டிராமல், உண்மையான சமாதானத்தைக் கருப்பொருளாகக் கொண்டு நீங்களும், நாங்களும் உழைக்கவேண்டும்.**

**இவ்வாறு தென்னிலங்கையில் இருந்து வருகைதந்து காண்பியல் கலைக் கண்காட்சியில் பங்குகொண்ட கலைஞர்களிடம் தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழினி வேண்டுகோள் விடுத்தார்.**

சேது காண்பியல் கலைக்கான கற்கைப்புலமும், தீர்த்த சர்வதேச கலைஞர்களின் கூட்டிணைப்பும் இணைந்து வழங்கும், அகம் - புறம் காண்பியல் கலைக் காட்சியின் அங்குரார்ப்பண நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாண பொதுசன நூல் நிலையத்தில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே தமிழினி இவ்வாறு தெரிவித்தார்.

தென்னிலங்கைக் கலைஞர்கள் மற்றும் சர்வதேசக் கலைஞர்களுடன் தமிழ்பேசும் கலைஞர்கள் மற்றும் பல பொதுமக்களுமாகக் கலந்துகொண்ட இந்த நிகழ்வில் தமிழினி தொடர்ந்து உரையாற்றுகையில் -

இன்று இந்தக் காண்பியல் கலைக்கண்காட்சியில், இந்த மண்ணில் நிகழ்ந்துகொண்டிருக்கும் போரைச் சித்திரிக்கும் விடயங்களைப பார்வையிடக்கூடியதாக இருக்கின்றது. போர் எவ்வளவு பயங்கரமானது. அது மனித மனங்களை எவ்வளவு மோசமாகப் பாதித்துள்ளது என்பதை இதனூடாகப் பார்க்க முடிகிறது.

உண்மையில் தமிழ் மக்களாகிய நாம் எப்பொழுதும் போரை விரும்பியவர்களில்லை. போரில் நாட்டம் கொண்டவர்களாக இருந்ததுமில்லை. ஆனால், போர் எமது விருப்பம் இன்றியே எம்மீது திணிக்கப்பட்டபோது தவிர்க்கமுடியாத நிலையிலேயே நாம் ஆயுதத்தைக் கையில் எடுத்தோம்.

போரை வெளியிலிருந்து பார்ப்பவர்களுக்குத் தெரியும் கொடூரத்தைவிட, உள்ளிருந்து அனுபவிப்பவர்களுக்கு அது கொடுக்கும் துயரம் மிகவும் பெரியதாகும்.

இரத்தத்தோடும், சதையோடும், கண்ணீரும் செந்நீருமாக நின்று திணிக்கப்பட்ட போரை முடிவுக்குக் கொண்டுவரும் போராட்டத்தை நாம் நடத்திக்கொண்டிருக்கின்றோம். இன்று இந்தக் காண்பியல் கண்காட்சியை எரிந்துபோன நூலகத்தில் நடத்திக்கொண்டிருக்கின்றோம். இந்த நூலகம் என்பது எம் ஒவ்வொருவரது மனத்தினுள்ளும் மிகவும் உணர்வுக் கிளர்ச்சியை ஏற்படுத்தும் ஒரு விடயமாகவே உளளது.

நான் சிறுமியாக இருந்தபோது, இந்த நூலகம் எரிகின்றது என்ற செய்தியைக் கேட்டு எமது வீடே ஒரு மரணத்தைச் சந்தித்த சோகத்தில் இருந்தது. அது இன்றும் எனது மனதில் ஆழமாகப் பதிந்திருக்கிறது.

காலத்தின் தேவை என்னைப் போராளியாக்கிய பின், இங்கே அருகிலுள்ள கோட்டை வெற்றிச் சமரின்போது எரிந்துகிடந்த இந்த நூலகத்தினுள்ளே நான் எனது தோழிகளுடன் பிரவேசித்தேன். எரிந்து எலும்புக்கூடாகவிருந்த இந்த நூலகத்தின் படிகளில் ஏறி எனது தோழிகளோடு யாழ்.மண்ணை முடிந்தவரை பார்வையிட்டேன்.

இங்கே கற்களை அழகாக அடுக்கி வெள்ளையடித்துள்ள இந்தக் கட்டடத்தில் நாம் நிற்கின்றோம். உண்மையில் இது ஒரு வெறும் கட்டடமே. இதில் இருப்பது கல்லும் சிமேந்தும் மட்டுமே. எமது நூல் நிலையம் எப்போது எரிந்தோ, அப்போதே அது இறந்துவிட்டது. ஒரு சுடுகாட்டில் எழுப்பப்பட்டிருக்கும் கல்லறை ஒன்றின் முன்பாக நிற்கும் மனநிலையே இப்போது என்னிடம் இருக்கின்றது.

இரத்தமும் சதையுமாகச் சிதைந்து ஆன்மாவையே எரித்துவிட்டு இன்று வெள்ளையடித்து அழகாககக் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் இந்தக் கட்டடத்தைப் போலவே தமிழ்த் தேசியமும் இருக்கவேண்டும் என்று சிங்கள பேரினவாதம் நினைக்கின்றது.

இது எமக்குத் தேவையில்லை. எமக்குத் தேவையானது கருமையை அழித்துவிட்டு வெள்ளையடித்து அழகுபடுத்தித்தரும் கட்டடமல்ல.

இன்று சமாதானம் என்பது வெறும் கோஷமாக மட்டுமே உள்ளது. இந்தச் சமாதானம் பற்றி நாம் நன்றாகவே புரிந்துவைத்துள்ளோம். இன்று எமது விடுதலைப் போராட்டம் ஒரு உன்னத நிலையை அடைந்துள்ளது. இந்தப் போராட்டம் இல்லாதிருந்தால் தமிழ்மக்கள் எப்பொழுதோ, ஏதோ ஒன்றுக்குள் கரைந்து போயிருப்பார்கள். தமிழர் எங்களை அடையாளம் காண நிலைநிறுத்திக் கொளள எமது போராட்டமே உதவியுள்ளது.

ஒரு போராளி எப்படி உருவாகின்றான் என்பதை நீங்கள் ஆராய



வேண்டும். ஒரு போர் வீரனுக்கும் போராளிக்கும் இடையே நிறைய வேறுபாடு உண்டு. போர்வீரன இயந்திரத்தைப்போன்று இடப்படும் கட்டளைக்கும், கொலைகளுக்கும் மட்டுமே பழக்கப்பட்டவன். ஆனால், போராளி தான்கொண்ட இலட்சியத்துக்காகத் தன்னை வரிதது, உயர்ந்த மானிட நேயத்துக்காக மரணத்தையே ஏற்றுக்கொள்பவன்.

இங்கு வந்துள்ள சிங்கள சகோதர சகோதரிகளே! நீங்கள் இங்கு வந்து இந்தக் காண்பியல் கண்காட்சிக்கூடாக எமது தமிழ் மக்களது மனங்களைத் தரிசித்துச் செல்கிறீர்கள். இங்கு காட்சிப்படுத்தப்பட்டிருப்பவை எமது வாழ்வின் ஒரு பகுதி மட்டுமே. இந்த வகைக் காண்பியல் கலைகளை வளர்த்தெடுப்பதில் எமது தேசியத் தலைவர் மிகவும் நம்பிக்கை கொண்டிருக்கிறார் என மேலும் தெரிவித்தார். (31)

### சாட்டி மாதா பெருவிழா

சாட்டி புனித சிந்தாதிரை மாதா யாத்திரைத் தல திருவிழா நாளை வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. தினமும் மாலை 5 மணிக்கு நவநாள் திருப்பலி நடைபெறும்.

எதர்வரும் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு செபமாலையும், அதனைத் தொடர்ந்து திருப்பலியும், பின்னர் நற்கருணை வழிபாடும், நற்கருணைப் பவனியும் இடம்பெறும். மறுநாள் காலை 6 மணிக்கு முதல் திருப்பலியும், தொடர்ந்து 8.30 மணிக்கு ஆயர் தலைமையில் திருவிழா திருப்பலியும் தொடர்ந்து திருச்சொருப பவனியும் இடம்பெறும். (55)

### பருத்தித்துறை நகர்ப்பகுதியில் சுகாதாரச் சீர்கேடு

பருத்தித்துறை நகர்ப்பகுதிகளிலும், சந்தையை அண்டிய பகுதிகளிலும் சுகாதாரச் சீர்கேடுகள் நிலவிவருகிறது. சந்தையை அண்டிய பகுதிகளில் குப்பை கூளங்கள் அகற்றப்படாமல் அதேயிடத்தில் கிடக்கின்றன.

இதைவிட கடதாசிகள், குப்பைகள், பொலித்தீன் பைகள் என்பவையும் நிறைந்து காணப்படுகின்றன. பாதைகளிலும் குப்பைகள் இருப்பதால் போக்குவரத்துச் செய்வோர் பெருஞ்சிரமங்களை எதிர்நோக்கிவருகின்றனர். (14)

### உதவி அரசாங்க அதிபர் நியமனம்

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபராக ஏ.ஜெயசீலன் நேற்றுமுன்தினம் முதல் பதவியேற்றுள்ளார். இதுவரை வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபராக கடமையாற்றிய வேலாயுதபிள்ளை யாழ்ப்பாண தலைமைச் செயலகத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (14)

## கட்டைக்காடு – சுண்டிக்குளம் வீதி புனரமைப்பு வேலைகள் ஆரம்பம்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கில் உள்ள கட்டைக்காடு - சுண்டிக்குளம் கடற்கரை வ்தி புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சுமார் 16 கிலோமீற்றர் நீளமுள்ள இந்த வீதியைப் புனரமைப்பதற்கு ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் சுமார் 40 இலட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது. வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்பு நிறுவனம் இந்த வீதியைப் புனரமைப்புச் செய்துவருகிறது. இதேவேளை, மாமுனை தொடககம் கட்டைக்காடு வரையான 19 கிலோமீற்றர் நீளமுள்ள வீதியும் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது. ஆனால், கற்கள் போடப்படவேண்டிய பகுதிகள் இன்னமும் புனரமைப்புச் செய்யப்படாமலுள்ளது. (122)

## உலக வங்கியின் உதவியுடன் ஆழியவளையில் வீடுகள்

(வடமராட்சி கிழக்கு)

உலக வங்கியின் நிதி உதவியுடன், வடமராட்சி கிழக்கு - ஆழியவளையில் நிர்மாணிக்கப்பட்டு வரும் வீடுகளை எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்யுமாறு உதவி அரசாங்க அதிபர் பயனாளிகளைக் கேட்டுள்ளார்.

இந்தக் கிராமத்தில் உலக வங்கியின் நிதி உதவியுடன் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் 25 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

இந்த வீடுகளைப் பார்வையிடுவதற்காக உலக வங்கியின் அதிகாரிகள் வெகுவிரைவில் இந்தப் பகுதிக்கு வருகைதரவுள்ளதைக் கருத்திற்கொண்டே 20 ஆம் திகதிக்கு முன்னர் வீடுகளைக் கட்டிமுடிக்குமாறு அவர் கேட்டுள்ளார். (122)

## சமாந்தரமாகப் பயணித்தவர்களுக்கு இரண்டாயிரம் ரூபா அபராதம்!

(யாழ்ப்பாணம்)

சைக்கிளில் சமாந்தரமாகப் பயணித்தவர்களுக்கு இரண்டாயிரம் ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளது.

யாழ்.நகர்ப்பகுதி வீதிகளில் நேற்றுமுன்தினம் சமாந்தரமாக வீதிகளில் பயணித்த நால்வரை யாழ்.போக்குவரத்துப் பொலிஸார் கைதுசெய்து யாழ்.மாவட்ட நீதிமன்றில் ஆஜர்படுத்தினர். இந்த வழக்கை விசாரித்த யாழ்.மாவட்ட நீதிவான் ரி.விக்னராஜா, வீதியில் மக்கள் போக்குவரத்துக்கு இடையூறு விளைவித்த குற்றத்திற்காக அவர்களுக்கு தலா 500 ரூபாவைத் தண்டமாகச் செலுத்துமாறு உத்தரவிட்டார். (ப)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்



பெயர் : ம.அமிர்தா
முகவரி : கிளிவெட்டி, அல்வாய் மேற்கு.

இரண்டாவது அகவையில்



பெயர் : பா.நிருஷனா
முகவரி : இத்தாவில், பளை

ஐந்தாவது அகவையில்



பெயர் : கு.வேணுகானந்த்
முகவரி : வாதரவத்தை, கரணவாய் மேற்கு.

ஒன்பதாவது அகவையில்



பெயர் : ஜக்குலின் தேவதாஸ்
முகவரி : இல.5 மாட்டின் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.


## மருதங்கேணி கோட்டத்துக்கு 12 ஆசிரியர்கள் நியமனம்!

கல்வியியற் கல்லூரியில் கல்வி பயின்று வெளியேறிய ஆசிரியர்களில் 12 பேர் மருதங்கேணி கல்விக் கோட்டத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்தப் 12 பேரில் ஆரம்பக் கல்வி ஆசிரியர்களும் மருதங்கேணி கல்விக் கோட்டத்தின் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் மீள ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகளில் கடந்த முதலாம் திகதிமுதல் கடமைகளைப் பெறுப்பேற்றுள்ளனர்.

இதேவேளை, ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகளில் இருந்து வெளியேறிய ஆசிரியர்களில் 13 பேர் ஏற்கனவே மருதங்கேணி கல்விக் கோட்டத்துக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், இந்தப் பிரதேசத்தில் உள்ள சில பாடசாலைகளில் சங்கீதம், விஞ்ஞானம் போன்ற பாடங்களைக் கற்பிப்பதற்கு ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாக தெரிவிக்கப்படுகின்றது. (122)

## டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பது அனைவரதும் கடமை

### மாவட்ட வைத்திய அதிகாரி கதிரவேற்பிள்ளை

(யாழ்ப்பாணம்)

உயிர்கொல்லி நோயாகிய டெங்கு நோயை ஒழிப்பதற்கு எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டியது அனைவரதும் கடமையாகும்.

இந்த ஒத்துழைப்பின் மூலமாக மனித வாழ்வை நோய்களின் அழிவிலிருந்து மீட்டுக்கொள்வதற்குரிய புதிய வழியொன்றை உருவாக்கியவர்கள் என்ற பெருமையை எல்லோரும் பெற்றுக்கொள்ளமுடியும் என, தேசிய டெங்கு ஒழிப்பு தினத்தை முன்னிட்டு உடுப்பிட்டி சமுர்த்தி வலயப் பிரிவினரால், டெங்கு நோய் ஒழிப்பு சம்பந்தமாக நடத்தப்பட்ட கருத்தரங்கு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய மாவட்ட வைத்திய அதிகாரி ந.கதிரவேற்பிள்ளை தெரிவித்தார்.

சமுர்த்தி வலயப் பிரிவினர் ஓட்டோ மூலமான டெங்கு ஒழிப்பு பிரசார நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருந்தனர்.

கரணவாய் தாமோதர வித்தியாசாலையில் சமூர்த்தி முகாமையாளர் கௌரி குணரட்ணம் தலைமையில் நடத்தப்பட்ட கருத்தரங்கில் டெங்கு நோய் தொடர்பான பல அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் டொக்டர் க. வேலும்மயிலும், வடமராட்சி தெற்கு பிரதேசசபை செயலாளர் ஏ.எம். ஜோசெப், உதவி முகாமையாளர் சி. யோகநாதன் பிரதேச பொது சுகாதார பரிசோதகர்களும் கலந்துகொண்டு உரைநிகழ்த்தினர். (12)

## பாடசாலைக்கான பௌதீக வளங்களின் தேவைகளைப் பூர்த்திசெய்யக் கோரிக்கை

மருதங்கேணி கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலை அதிபர்கள் தமது பாடசாலைகளின் பௌதீக வளங்களைப் பூர்த்தி செய்துதருமாறு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரனிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத்திட்ட நிதியிலிருந்து பாடசாலைகளுக்குத் தேவையான விளையாட்டு மைதானங்கள், கணினிகள், நூலகத்திற்கான புத்தகங்கள், தளபாடங்கள், தட்டச்சு இயந்திரங்கள் போன்றவற்றை பெற்றுத்தருவதற்கு ஆவன செய்யுமாறு கடித மூலம் கோரியுள்ளனர். (122)




# துணுக்காய் பிரதேச காவல் பணிமனையினரால் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டவர்கள் கைது

முல்லைத்தீவு - துணுக்காய் பிரதேச காவல் பணிமனையினரால் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி ஒழிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

துணுக்காய் பிரதேசத்துக்குட்பட்ட 3 ஆம் யூனிற் மல்லாவி, அனிஞசயன்குளம் ஆகிய பகுதிகளில் கடந்த சில தினங்களாக சட்டவிரோதமாக கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட நபர்கள் - துணுக்காய் பிரதேச காவல் பணிமனையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள மல்லாவி மாவட்ட நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கடந்தவாரம் மல்லாவி பிரதேசத்தில் 4.5 லீற்றர் கசிப்பும், அவற்றை உற்பத்தி செய்த உபகரணங்கள் என்பனவும் கைப்பற்றப்பட்டு, சம்பந்தப்பட்ட நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் பாண்டியன்குளம் நட்டாங்கண்டல் பகுதிகளில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளது. இந்தத் திருட்டு சம்பவங்களை தடுப்பதற்கான நடவடிக்கையில் துணுக்காய் பிரதேச காவல்துறையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

## வவுனியா

# இறம்பைக்குளம் புனரமைப்பு வேலைகள் புனர்வாழ்வு கழகத்தினரால் முன்னெடுப்பு

வவுனியா நெடுங்கேணி இறம்பைக்குளம் புனரமைப்பு வேலைகள் நடைபெறவுள்ளது. நெடுங்கேணி அபிவிருத்தி புனர்வாழ்வுக் கழகத்தினரால் இந்தப் புனரமைப்பு வேலைகள் முன்வைக்கப்படவுள்ளது.

மேலும் நெடுங்கேணி தெற்குப்பகுதியிலுள்ள 8 கிலோமீற்றர் தூர வீதியை, இந்த புனர்வாழ்வுக் கழகத்தினர் திருத்தம் செய்துள்ளதுடன், சூடுவிழுந்தானில் சிறந்த கிணறு ஒன்றையும், நெடுங்கேணி தெற்குப் பகுதியில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கென 117 கழிப்பறைகளையும் அமைக்கும் பணியிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

# ஆசிரியர் பற்றாக்குறை நிலவும் தமிழ்க் கலவன் பாடசாலை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கூழாமுறிப்பு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பாடசாலையில் கணிதம், சமூகக்கல்வி, விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கு நிரந்தர ஆசிரியர்கள் இல்லை எனவும், பெரும்பாலும் தொண்டர் ஆசிரியர்களே இந்தப் பாடங்களைப் போதித்து வருவதாகவும் தெரிய வருகின்றது.

இதேவேளை கரிப்பட்டமுறிப்பு பாடசாலையில் மாணவர்களுக்கு அடிப்படை வசதிகள் எதுவும் இல்லாத நிலையில் கல்வி கற்று வருவதாகவும், குறிப்பாக ஆசிரியர், மாணவர்களுக்கு கழிப்பறை வசதிகள் இதுவரை ஏற்படுத்தப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சிரமதானம்

(ஸ்கந்தபுரம்)

ஸ்கந்தபுரம் 1 ஆம் பாடசாலை பிரதான வீதி உலக உணவுத் திட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது. இதற்கான ஆரம்ப வேலையாக வீதித்துப்பரவு செய்யும் வேலை மேற்கொள்ளப்படுகின்றது. அந்தப் பகுதி மக்களால் சிரமதானம் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

## வரட்சி நிவாரண வேலைகள் ஆரம்பம்

(வன்னேரி)

வன்னேரிக்குளம் கிராமத்தில் வரட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வரட்சி நிவாரணம் வழங்கப்படவுள்ளது. இதற்கான வேலைகள் யாவும் கிராம சேவையாளர் ப.சபாரட்ணம் தலைமையில் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியுள்ளது.

## வாக்குரிமை பதிவு

(வன்னேரி)

வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான் 8 ஆம் கட்டை, ஸ்கந்தபுரம், அக்கராயன் கிராமங்களில் வாக்குரிமைப் பதிவுகள், கிராம சேவையாளர் தலைமையில் மேற்கொள்ளப்படுகின்றது. 1986 ஆம் ஆண்டு வைகாசி மாதத்துக்கு முன் பிறந்தவர்களுக்கான பதிவுகளே தற்போது மேற்கொள்ளப்படுகின்றது.

## அத்துமீறி மணல் அகழ்வு

(அக்கராயன்)

அக்கராயன் 8 ஆம் கட்டை பாலன் குளத்துக்கும், பின்னுள்ள ஆற்றுப்படுக்கையில் மணல் ஏற்றுவதற்கு தடை செய்யப்பட்டுள்ளது.

அந்தத்தடையை மீறி மண் ஏற்றிச் செல்வதாக, அந்தப் பகுதிக் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் தெரிவிக்கின்றன. இது தொடர்பான தடை உத்தரவுக்குச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்ட போதும், எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படாத நிலையுள்ளதாக கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் தெரிவிக்கின்றனர்.

## பாலன்குளம் அணைக்கட்டில் உடைவு

(அக்கராயன்)

அக்கராயன் 8 ஆம் கட்டை கிராமத்தில் அமைந்துள்ள பாலன் குளத்தின், அணைக்கட்டின் சரிவின் உட்பகுதியிலும், வெளிப்பகுதியிலும் 50அடி நீளமான அளவுக்கும், 3அடி ஆழமளவுக்கும் மண் இறக்கமடைந்துள்ளது.

இது கடந்த வருடம் பெய்த மழை காரணமாக இடம்பெற்றது. அணைக கட்டைப் பாதுகாக்கும் நோக்குடன், இருநூறு வரையிலான உரப்பைகள் மூலம் மண்மூட்டை கட்டி அடுக்கப்பட்ட நிலையிலுள்ளது. இந்த உரப்பைகளை அகற்றி, நிரந்தரமாக மண்போட்டு இறுக்க வேண்டியுள்ளதால், இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்ட போதும் எதுவித பயனும் கிடைக்கவில்லை. இதனால் அந்தப் பகுதி மக்கள் விசனம் அடைந்துள்ளனர் என அறியமுடிகின்றது.

# இருமாவட்ட எல்லைகளுக்கிடைப்பட்ட 'ஆரோக்கியபுரம்' கிராமத்தின் அவலம்

அக்கராயன் 8 ஆம் கட்டை ஆரோக்கியபுரம் கிராமத்தில் 68 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இந்தக் கிராமம் கிளிநொச்சி மாவட்டத்துக்கும், முல்லைத்தீவு மாவட்டத்துக்குமான எல்லைக் கிராமமாக அமைந்துள்ளது. ஆனாலும், இது முல்லைத்தீவு மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில் 2001 ஆம் ஆண்டு நியாப் திட்டத்தின் கீழ் அந்தக் கிராமம் புனரமைக்கப்பட்டது. இந்தத் திட்டம் கிளிநொச்சி மாவட்டத் திணைக்களங்களால் நடைமுறைப்படுத்தப்பட்டது.

மேலும் ஜீவனோபாயக் கடன் வழங்கல் கிளிநொச்சிப் பிரதேசத்துக்குள்ளான அக்கராயன் கிராம சேவையாளரால்தான் வழங்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் இந்தக் கிராமத்துக்கான, மேட்டுக் காணிக்கான காணி அனுமதிப் பத்திரம் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திலும், 1994 ஆம் ஆண்டு வழங்கப்பட்டது. வயல் காணிக்கான அனுமதிப் பத்திரம் கிளிநொச்சி மாவட்டக் செயலகத்தில் பதிவுக்குட்படுத்தப்பட்டு பத்திரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் பிரதேச செயலர், கிராம சேவையாளர், உட்பட அனைத்து அலுவலகச் செயற்பாடுகளும் இரண்டு மாவட்ட அதிகாரிகளால் மேற்கொள்ளப்படுவதால், எங்கு எப்படிச் சென்று அலுவல்கள் பெறுவது என்பது தெரியாமலும், அப்படி யாரிடமாவது ஒருவரிடம் சென்றால், மாறி மாறி பதில்களைக் கூறி மக்களின் தேவைகளை நிறைவேற்றத் தவறுகின்றனர். இதனால் இந்தக் கிராமத்தை ஏதாவது ஒரு மாவட்ட எல்லைக்குட்படுத்தி தேவைகளைப் பூர்த்தி செய்து தருமாறு அந்தப் பகுதி மக்கள் கோருகின்றனர்.

# இராணுவத்தினருக்கும் புலிகளுக்குமிடையிலான சந்திப்பு அடுத்தவாரம் மட்டக்களப்பில் நடைபெறும்

மட்டு. அம்பாறை சிறப்புத் தளபதி மற்றும் மட்டு. அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் நேற்று உலங்குவானூர்தி மூலம் கிளிநொச்சிக்கு வந்தடைந்துள்ளனர்.

இராணுவத்தினருக்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று அடுத்த வாரம் மட்டக்களப்பில் நடைபெறவுள்ளது. இது தொடர்பாக கலந்துரையாடுவதற்காகவே இவர்கள் கிளிநொச்சி வந்துள்ளதாகத் தெரிய வருகிறது.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் அரசியற் பணிபுரியும் போராளிகள் மீது இராணுவத்தினர் போர்நிறுத்த மீறல்களை மேற்கொணடு வருகிறனர். இதுபற்றி கலந்துரையாடப்படவுள்ளதாக தெரிய வருகிறது.

## - துணுக்காய் -

# பாண்டியன்குளம் பிரதேசத்தில் வீதி ஒழுங்கு நடவடிக்கை

(துணுக்காய்)

நேற்று முன்தினம் காலைமுதல் துணுக்காய் பாண்டியன்குளம் பிரதேசத்தில் தமிழீழ காவல்துறையினரால் வீதியொழுங்கு நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

இது குறித்துக் கருத்தூட்டலும், கண்காட்சியும் காலை 9.00 மணிக்கு, மல்லாவி மத்திய கல்லூரியில் ஆரம்பமாகியது. முதலில் ஈகச் சுடரை மல்லாவி மத்திய கல்லூரி அதிபர் ஏற்றி வைக்க, தமிழீழத் தேசியக் கொடியை நிதித்துறையைச் சேர்ந்த அகிலன் ஏற்றிவைத்தார்.

இதனைத் தொடர்ந்து துணுக்காய் காவல் பணிமனைப் பொறுப்பாளர் தி.பகீரதன் தலைமையில் மண்டப நிகழ்வுகள் இடம்பெற்றது. கருத்தூட்டல் தொடர்பான அறிமுகவுரையை முல்லைத்தீவு மாவட்ட காவற்துறைக் கண்காணிப்பாளர் இறஞ்சித்குமார் நிகழ்த்தினார். ஆசியுரையை கோட்டக்கல்வி அதிகாரி சுந்தரமூர்த்தியும், சிறப்புரையை பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.புனிதனும் நிகழ்த்தினார். பின்னர் வீதி ஒழுங்குகள் தொடர்பான கருத்தூட்டலையும் துணுக்காய் காவல் பணிமனைப் பொறுப்பாளர் தி.பகீரதன் வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து கடந்த காலங்களில் ஏற்பட்ட வீதி விபத்துக்களின் போது ஏற்பட்ட கோரச் சம்பவங்களின் அவலத்தை விளக்கும் புகைப்படங்கள் கண்காட்சிக்கு வைக்கப்பட்டன.

சம காலத்திலேயே துணுக்காய் பிரதேச செயலகத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதில் துணுக்காய் பிரதேச செயலக உட்பட அதிகாரிகள் பலரும் பங்குபற்றினர்.

இந்த நிகழ்வில் தமிழீழ காவல் துறையினரின் வாகனப் போக்குவரத்துக் கண்காணிப்பாளர் பு.கனகசிங்கமும் துணுக்காய் காவல்பணிமனைப் பொறுப்பாளர் தி.பகீரதனும் பங்கு கொண்டதுடன், வீதி ஒழுங்கு கருத்துக்களைத் தொடர்ந்து புகைப்படக் கண்காட்சி நடைபெற்றது.

துணுக்காய், மல்லாவி ஆகிய இடங்களில் இருந்து ஆயிரம் பேர் வரையிலான ஆசிரியர்களும், மாணவர்களும் கலந்து கொண்டு பயன் பெற்றதுடன், அங்கு சமூகமளித்திருந்த 'காவல்துறையினருடன் கலந்து வீதி ஒழுங்கு தொடர்பான கருத்துக்களை பகிர்ந்து கொண்டனர்.



கிளிநொச்சி புதுமுறிப்புக்குளத்தின் புனரமைப்பு வேலைகள் இடம் பெறுவதை படத்தில் காணலாம். படம்: தி.தவபாலன்

## வரட்சி நிவாரணம் வழங்கப்படவில்லை

(அக்கராயன்)

அக்கராயன் 4 ஆம் கட்டை அமதிபுரம், 8 ஆம் கட்டை ஆரோக்கியபுரம் கிராம மக்கள் தற்போது நிலவும் கடும் வரட்சி காரணமாக, குடிநீர்த் தட்டுப்பாட்டை எதிர்நோக்கியுள்ளனர். அத்தோடு பயிர்ச்செய்கை நிலங்களும் எரிந்துள்ளன. இந்த மக்களுக்கு வரட்சி நிவாரணம் வழங்குவது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பாராமுகமாக வுள்ளதால் மக்கள் கவலையடைந்துள்ளனர்.

# அரசினர் வைத்தியசாலை முன்பாக கழிவுப் பொருட்கள் தேங்கியுள்ளன

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு அரசினர் வைத்தியசாலைக்கு முன்பாக சுற்றுமதிலுக்கு, அருகாமையில் நீண்டநாட்களாக கழிவுகள் அகற்றப்படாமல் தேங்கியிருப்பதை அவதானிக்க முடிகின்றது.

இது சுகாதாரத்துக்கு சீர்கேடாகவேயுள்ளது. இந்தக் கழிவுகள் தொடர்ந்தும் அகற்றப்படாமல் இருக்குமாயின், தற்போது பெய்து வரும் மழை காரணமாக, இந்தப் பகுதியில் நுளம்புகள் பெருக வாய்ப்புண்டு. இதனால் மேலும் பல தேவையற்ற பிரச்சினைகளை மக்கள் எதிர்நோக்க வேண்டிய சூழ்நிலை கூட உருவாகலாம். இதைவிட நீர் சீரான முறையில் வழிந்தோட முடியாத நிலையில் அந்தப் பகுதியுள்ளது. இதற்கு காரணம் கழிவுப் பொருட்கள் தேங்கிக் கிடப்பதால் தான் இந்நிலை ஏற்படுகின்றது என தெரியவருகிறது.

# சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவினரால் பாடசாலை மட்டத்திலான முதலுதவி பயிற்சிநெறி

(கிளிநொச்சி)

சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப பிரிவினர் கல்வித் திணைக்களத்துடன் இணைந்த சுகாதாரத் திணைக்களத்தினூடாக ஏ.எஸ்.பி.நிறுவனத்தின் நிதியுதவியுடன் பாடசாலை ஆசிரியர்களுக்கான சமூக நலப் பயிற்சி நெறியின் முதற்கட்டம் ஆனி மாதம் நடைபெற்றது.

அதன் தொடர்ச்சியாக இரண்டாம் கட்ட சமூகநலப் பயிற்சி நெறி- பாடசாலை மட்டத்தில் மாணவர்களுக்கு கடந்த சனி,ஞாயிறு ஆகிய இருதினங்களில் கிளிநொச்சி மாவட்ட பரந்தன் வலயத்தில் முருகானந்த மகாவித்தியாலயம், பரந்தன் இந்து மகாவித்தியாலயம் ஆகியவற்றில் சிறப்பாக நடைபெற்றது.

இந்தப் பயிற்சி நெறியில் ஒவ்வொரு பாடசாலைகளிலும் 50இற்கு மேற்பட்ட மாணவர்களும், ஆசிரியர்களும், அதிபர்களும் கலந்து கொண்டனர். இந்தப் பயிற்சி நெறியில் முதலுதவி, உடல் அமைப்பு தொழிற்பாடும், முதலுதவிச் செய்முறைகள், தொற்று நோய்கள், சுகாதார நடைமுறைகள் தொடர்பாக பல விரிவுரைகள் சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவினால் நடாத்தப்பட்டது.

இந்தப் பயிற்சி நெறியில் கலந்து கொண்ட அனைவருக்கும் முதலுதவி தொடர்பான கைநூல் வழங்கப்பட்டதுடன், மேலும் பயிற்சியை நிறைவு செய்த ஒவ்வொரு பாடசாலைகளுக்கும் முதலுதவிப் பெட்டிகளும் அதற்கான மருந்துகள் மற்றும் உபகரணங்களும் வழங்கப்பட்டதுடன் சான்றிதழ், சின்னங்கள் ஆகியனவும் சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவி படையினரால் வழங்கப்பட்டன.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு

*நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து*
*மறைமொழி காட்டி விடும்.*

திருக்குறள்

## நமது நோக்கு

### விபத்துக்களும், காரணிகளும்

யாழ். குடாவில் கடந்த சில நாட்களாக வீதிவிபத்துக்கள் மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளதை அது தொடர்பாக வரும் செய்திகளும், புள்ளிவிபரங்களும் எடுத்துக்காட்டுகின்றன.

சமாதான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டு ஏ-9 பாதை போக்குவரத்துக்கென திறந்துவிட்ட பின்னர் தென்பகுதியிலிருந்து குடாநாட்டை நோக்கிய பயணங்களை மேற்கொள்ளும் பயணிகள் மற்றும் வர்த்தக வாகனங்களின் தொகை என்றும் இல்லாத அளவிற்கு அதிகரித்துள்ளதுடன், யாழ்நகர் நோக்கிய அவற்றின் வருகையின் வேகமும், கட்டுப்படுத்த முடியாத அளவிற்கு மிகை வேகத்தினைக் கொண்டிருப்பதால், வீதி விபத்துக்களும் கட்டுப்படுத்த முடியாத அளவுக்குப் போய் விட்டன.

வேகப்பயணம் உற்சாகமானது என்பதற்காக அதனை விவேகமற்றமுறையில் மேற்கொள்வதன் விளைவுகளும், பாரதூரமானது என்பதை மறுத்தலின் பின் தாக்கங்களை உணராதிருத்தல் ஆபத்தானதாகும்.

போக்குவரத்துக்கான விதிமுறைகளை மீறுதல் என்பது பொதுமக்களின் பிரயாண நகர்வுகளுக்கு ஆபத்தை உண்டு பண்ணுவதாகவே அமையும். இத்தகைய ஆபத்து விபரீதங்களை சட்டம் ஒழுங்கைப் பேணவேண்டியவர்களால் மட்டும் கட்டுப்படுத்திவிடமுடியாது.

சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்போர் தரப்பினரால், வீதிப் போக்குவரத்துத் தொடர்பான விதிமுறைகள் பொதுமக்களுக்கு வெளியிடப்பட்டு, அதற்கமைய நடக்கும்படி அறிவுறுத்தப்பட்டாலும், அதனை எவரும் பெரும்பாலும் அத்தியாவசிய விடயமாகக் கருதி ஆழ்ந்தகவனத்திற்கெடுப்பதில்லை என்பது தான் கவலைதரும் விடயமாகும்.

சட்டம் ஒழுங்கு விதிகள் மக்களின் பாதுகாப்புக்காக ஏற்படுத்தப்பட்டவை என்பது வெளிப்படையான விடயமே ஆகும். அதிலும் குறிப்பாக, போக்குவரத்து தொடர்பான விதிமுறைகள் முழுக்க முழுக்க மக்களின் பாதுகாப்புக் குறித்து நடைமுறைப்படுத்தப்படுகின்றன. ஆனால், அந்த விதிமுறைகளை பெரும்பாலானோர் மதித்து நடப்பது கிடையாது என்பது கசப்பான உண்மையாகும்.

மக்களின் இந்தப் பொறுப்பற்றதும், அக்கறையீனம் கொண்டதுமான அலட்சியத் தன்மையே இன்றைய நாட்களில் அவர்கள் சந்திக்கும் சகல விபத்துக்களுக்கும் மூல காரணமாகும்.

மக்கள் எனும்போது இதற்குள் பாதசாரிகள், வாகன ஓட்டிகள், கனரக வாகனசாரதிகள், பயணிகள் வாகனசாரதிகள் என அனைவரும் அடங்கவேசெய்வர்.

இன்று நம் மக்களிடையே நவ நவமான வாகனங்களின் பாவனை அதிகரித்து விட்டது. வாகனங்களின் அதிகரிப்புக்கேற்ப சாலைகளின் விஸ்தீரணம் அதிகரிக்கப்படவில்லை. அத்துடன், வாகனதாரிகளில பெரும்பாலானோர் இளைஞர்களாக இருப்பதுடன், அவர்கள் முறையான ஓட்டுனர் பயிற்சிபெற்ற சாரதி உரிமைப்பத்திரங்கள் அற்றவர்களாகவும், வீதிப் போக்குவரத்து விதிமுறைகள் குறித்த தெளிவான அறிவு இல்லாதவர்களாகவும் இருப்பதுதான் பெருமளவு விபத்து ஆபத்துகளுக்கும் காரணமாகும்.

அடுத்தது மதுபோதையில் வாகனங்களை செலுத்துவோர் பெருமளவு விபத்து மரணங்களுக்கு காரணமாகின்றனர். இதனைவிடவும் வேறு பல வகையிலான போதை வஸ்து பாவனைகளின் அதிகரிப்பும் விபத்துக்கள் உருவாக காரணிகளாகின்றன.

அண்மைக்காலங்களில் இந்தியாவில் தடைசெய்யப்பட்ட பான்பராக் போன்ற ஒருவித மயக்கநிலையை ஏற்படுத்தும் போதைப் பொருட்களை உள்ளடக்கிய மென்றுசுவைக்கும் பாக்குத்தூள் வகையினைச் சேர்ந்த உடல்நலத்திற்குத் தீங்கு விளைவிக்கும் பொருளின் பாவனையானது- யாழ்குடாவில் சமூகத்தின் பல்வேறு மட்டத்தினரிடையேயும் குறிப்பாக மாணவர்கள், இளைஞர்கள், சாரதிகள் மத்தியில் அதிகரித்திருப்பதாக சமூகஆய்வுகளில் ஈடுபட்டிருக்கும் பொறுப்புடையோர் கவலை தெரிவித்துள்ளனர்.

இந்தப் போதைப்பொருட்கள் குறைந்த விலையில் கைக்குக் கிடைக்கும் வகையில் சாதாரணமாக சகலஇடங்களிலும் விற்பனைசெய்யப்படுவது இதன் பாவனை அதிகரிப்புக்குக் காரமாகும். இத்துடன் தென்பகுதியில் இருந்து மருத்துவப் பொருள் என்ற சான்றுக்குறிப்புடன் இங்கு வந்து விற்பனையாகும் சிலவகை லேகியங்களும், இவ்வாறு போதையை ஊட்டும் பொருட்களேயாகும். இதனைப்பாவிப்போர் தொகையும் வெகுவாக இங்கு அதிகரித்துள்ளது எனலாம்.


இவற்றின் பாவனையும் விபத்துக்களின் காரணிகளுள் ஒன்றாகும். இவற்றை உட்கொள்பவர்கள் வாகனங்களைச் செலுத்தும் வேளையில் சுயகட்டுப்பட்டை இழக்க நேரிடுகிறார்கள் என்பது மருத்துவர்களின் பக்கமிருந்துவரும் கருத்தாகவும் உள்ளது.

வாகனங்களில் செல்லும்போது கையடக்கத் தொலைபேசிகளூடாகத் தொடர்புகளை மேற்கொள்வதும், விபத்துக்களை உருவாக்கிவிடுகின்றன. உரையாடலில் கவனம் செலுத்தும் போது வாகனத்தைச் செலுத்துவதில் உள்ளகவனம் சிதறுவதே அதற்கு காரணமாகும்.

வாகனங்களில் பயணிப்போர் தலைக்கவசம் அணிவதை சிரமமாகக்கருதுவதும் விபத்துக்களால் ஏற்படும் பாதிப்பை அதிகரிக்கிறது.

எவ்வகையிலும் விபத்துக்கள் உயிரிழப்புக்களை ஏற்படுத்தும் அபாயம் தொடர்வதானது பேரவலங்கள் தொடரவே வழிவகுக்கும். இதனைத் தடுக்க சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரும் சுய உணர்வுடன், மனித நேயத்துடன் செயற்படுவதுடன், விபத்துக்களுக்குக் காரணம் நாம் தான் என்பதை ஒவ்வொருவரும் பொறுப்புணர்வுடன் சிந்திக்கவும் வேண்டும்.

## நாடும் நடப்பும்




சமாதானத்தை விரைவில் முன்னெடுக்காவிடின், நிதியுதவி நிறுத்தப்படும் என ஜப்பான் அரசு எச்சரிக்கை

# நவோதயா பாடசாலைத் திட்டத்தின்கீழ் வடமராட்சியில் இருபாடசாலைகள் தெரிவு

பிரதேச செயலகப் பிரிவு ஒவ்வொன்றுக்கும் தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு பாடசாலை என்ற கல்வியமைச்சின் நவோதயா பாடசாலைத் திட்டத்தின்கீழ், வடமராட்சி கல்வி வலயத்தில் இருபாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவில் - பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் - வதிரி திரு இருதயக் கல்லூரியும் தெரிவாகியுள்ளன.

இந்தக் கல்லூரிகள் ஜனாதிபதியின் நேரடிப்பார்வைக்குட்படுத்தப்பட்டு, கல்லூரியின் அபிவிருத்தி, முன்னேற்றச் செயற்பாடுகள் கல்வியமைச்சினால் மேற்கொள்ளப் படவுள்ளன.

இந்தக் கல்லூரிகளின் வளர்ச்சிப் பணிக்கு, பெற்றோரின் பங்கு பெரிதும் வேண்டப்படுகின்றன. கல்வியமைச்சுக்கு ஊடாக இந்தக் கல்லூரிகளுக்கு அவைகளின் தரத்துக்குகேற்ப முறையே 50 ஆயிரம், 40 ஆயிரம், 30 ஆயிரம் ரூபா வழங்கப் பட்டுள்ளன. இந்த நிதி கல்லூரியின் வளர்ச்சிக்கான பொருட்கள், உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்குப் பயன்படுத்தப்படும்.

பாடசாலையின் சுற்றுப்புறச் சூழல் துப்புரவுப் பணி மற்றும் வேறு பணிக்காக மனித வலுவைப் பெற்றோர் முன்னின்று வழங்க வேண்டுமென்றும் கோரப்பட்டுள்ளது.

இந்தவாரம் முழுவதும் நவோதயா பாடசாலை வாரம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. சமூகம், தலைமைத்துவம், சமயம், மொழி, உளத்திறன் என ஒவ்வொருதினமும் ஒவ்வொரு தலைப்புகளில் மாணவர் ஆசிரியர் ஒன்றுகூடல் நடைபெற்று வருகின்றன. (13)

### தென்மராட்சியில்

## விபத்து - மோதல் சம்பவங்களில் காயமுற்றோர் மருத்துவமனையில்

தென்மராட்சிப் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற சம்பவங்களில் காயமடைந்தவர்கள் சாவகச்சேரி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மட்டுவில் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் காயமுற்ற சரவணமுத்து திலீபன் (வயது - 19), கணேசமூர்த்தி கோபிதரன் (வயது 28) ஆகியோரும் கெற்பெலி பகுதியில் - தந்தை, மகன் இடையேயான கைகலப்பில் காயமுற்ற குணரட்னம் குணசீலன் (வயது 28) அதே இடத்தில் இனம் தெரியாத நபர்களின் தாக்குதலில் காயமுற்ற பெருமாள் குணரட்ணம் (வயது 44) பெருமாள் விநாசித்தம்பி (வயது 45) ஆகியோரும் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சைப்பெற்று வருகின்றனர். (29)

## உதவி அரசாங்க அதிபருக்கு சேவைநலன் பாராட்டு விழா

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் இருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் உதவி அரசாங்க அதிபர் வி.ப.வேலாயுதம் பிள்ளைக்கு சேவைநலன் பாராட்டுவிழா பல இடங்களில் நடைபெற்றுவருகின்றன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆழியவளை கிராம மக்களால் ஆழியவளை பாடசாலையில், பாடசாலை அதிபர் ச.திரவியராசா தலைமையில் நடைபெற்ற விழாவில் - வடமராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் வி.எஸ் தியாகராசா, வடமராட்சி கிழக்குப் புனரமைப்புக் குழுத் தலைவர் சி.பொன்னம்பலம், கிராம அலுவலர் வி.நடராசா ஆகியோர் உட்பட பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர் .

ஓய்வுபெறும் உதவி அரச அதிபருக்கு, கிராம மக்களினால் அன்பளிப்புப் பொருட்களும் வழங்கப்பட்டன. (122)

### புங்குடுதீவு மக்களின்

## மருத்துவ தேவைகள் நெருக்கடி நிலையில்

கடந்த மாதம் புங்குடுதீவு வைத்தியசாலைக்கு வைத்திய அதிகாரி நியமிக்கப்பட்டு சில நாட்கள் பணிபுரிந்தார். அப்போது அவ்வூர் மக்களின் வைத்திய தேவை சீர் செய்யப்பட்டு இருந்தது பின்பு சுகாதார திணைக்களம் திடீரென அவரை நெடுந்தீவு பிரதேசத்துக்கு மாற்றம் செய்துவிட்டது.

இதன் பின் வேறு வைத்திய அதிகாரியை திணைக்களம் அனுப்பிவைத்தது. எனினும், அவரையும் திணைக்களம் நயினாதீவுக்கு மாற்றி விட்டது. ஆதலால் அந்த ஊர் மக்களின் வைத்திய பிரச்சினை தொடர்ந்தும் நெருக்கடியைச் சந்திக்க வேண்டியுள்ளது. இதனால், அந்த ஊர் மக்கள் விசனமும் ஏமாற்றமும் அடைந்துள்ளனர். (64)

## முன்பள்ளி ஆசிரியருக்கான சேவைக்காலப் பயிற்சிகள்

வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி சபைகளின் கீழ் கடமையாற்றும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான சேவைக் கால பயிற்சிகள் நடைபெறவுள்ளன.

இந்த மாதம் 10, 11, 12ஆம் திகதிகளில் இந்தப் பயிற்சிகள் வடக்கு கிழக்கு மகாண கேட்போர் கூடத்தில் இடம் பெற இருப்பதால் அனைத்து முன்பள்ளி ஆசிரியர்களையும் பங்குபற்றுமாறும் அவர்களின் விபரங்களை அனுப்பிவைக்குமாறும் சகல உள்ளூராட்சி சபைகளையும் பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் க.இராசையா கேட்டுக்கொண்டுள்ளார். (29)

### நெல்லியடி நகரப்பகுதிக்குள்

# போக்குவரத்து இடையூறுகளைத் தவிர்க்க நடைமுறைப்படுத்தப்படவுள்ள தீர்மானங்கள்

நெல்லியடி நகரப் பகுதிக்குள் போக்குவரத்து இடையூறுகளைத் தவிர்க்கும் முகமாக, பருத்தித்துறை நீதிமன்ற நீதிவானால் ஒழுங்கு செய்யப்பட்ட கலந்துரையாடலில், முன்வைக்கப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்தும் முகமாக, வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேசசபைகளில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது சம்பந்தமான சுற்று நிருபம் - பொலிஸ் அதிகாரியினால், நெல்லியடி வர்த்தகசங்கம், நெல்லியடி முச்சக்கர வண்டிச் சங்கம் ஆகியவற்றுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இந்தச் சுற்றுநிருபத்தில் உள்ளடக்கியுள்ள தீர்மானங்கள் பின் வருமாறு -

கடைகளுக்கு முன்னால் பொருள்களைப் பரப்பிவைத்து வியாபாரம் செய்யக்கூடாது.

நெல்லியடி மத்தியிலுள்ள முச்சக்கரவண்டிகளுக்கான தரிப்பிடம் பழைய சந்தையில் அதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் மட்டுமே நிறுத்தவேண்டும். அதேபோல் வைத்திய கலாநிதி இராதாகிருஸ்ணன் சிகிச்சை நிலையத்துக்கு அருகாமையிலுள்ள முச்சக்கர வண்டிகள் - விக்கினேஸ்வராக் கல்லூரி வீதியிலும், வதிரிச் சந்தியிலுள்ள முச்சக்கர வண்டிகள் - கோவில் வீதியிலும் நிறுத்திவைக்கப்பட வேண்டும்.

துவிச்சக்கர வண்டிகள் பழையசந்தையில் அதற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் நிறுத்தப்படவேண்டும்.

வியாபார நிலையங்களுக்கு வரும் பொருட்களை ஏற்றி இறக்கும் பணி அறிவிப்புப் பலகையில் உள்ளவாறு நடைபெறவேண்டும்.

வாகனங்கள் திருத்துநர் - வீதிகளில் வைத்துத் திருத்தக் கூடாது. கடைவீதிகளிலோ, ஓரங்களிலேயோ கல்,மண், பறிக்கக் கூடாது போன்ற தீர்மானங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. (13)

**நவோதயா வாரம்**

**காவலூர் விஜேந்திரன்**



# நவோதயா துரித அபிவிருத்தித் திட்டம் - 2004 பாடசாலைகளின் அபிவிருத்திக்கு உதவும் ...

அரச இயந்திரங்கள் எப்பொழுதும் ஒன்றாகவே இருந்த போதிலும், அதன் சாரதிகளும், நடத்துநர்களும் காலத்திற்குக்காலம் மாற்றப்படுகிறார்கள் அல்லது மாற்றம் பெறுகிறார்கள்.

இந்தச் சாரதிகளும், நடத்துநர்களும் புதுப்புது நடைமுறைகளையும், சலுகைகளையும், நிவாரண உதவித் திட்டங்களையும், பயணிகளுக்கு வழங்கி வருகின்றமை அரசாங்கங்கள் கையாளும் ஓர் அரச அடிப்படைவாதக் கொள்கையாகும். இவ்வாறானதொரு கவர்ச்சிகரமான செயற்பாடே இன்றைய அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படுகின்ற நவோதயா துரித அபிவிருத்தித் திட்டம் - 2004 ஆகும்.

பாடசாலைகள்- தேசத்தின் முன்னேற்றத்திற்கு முழுமையான பங்களிப்பு செய்யக்கூடிய மாணவர் சமுதாயம் ஒன்றினை சமூகத்திற்கு உருவாக்கிக் கொடுக்கின்ற சக்திமிக்க ஒரு மத்திய நிலையம் என்றால் மிகையாகாது.

இந்த யதார்த்தமான உண்மையை வெளிக்கொணரும் முகமாகவே நவோதயா பாடசாலை வாரம்-2004 இம்மாதம் 6 ஆம் திகதி முதல் 10 ஆம் திகதிவரை மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

"நவோதயா பாடசாலைகளின் மூலம் நாடு பொலிவு காணல்" என்ற தொனிப்பொருளின் கீழ் முடுக்கிவிடப்பட்ட ஓர் விழிப்புணர்வு வாரமாகவே இதனைக் கொள்ளலாம்.

நவோதயா துரித அபிவிருத்தித் திட்டத்தின்கீழ், நாடு முழுவதும் 342 பாடசாலைகள் அபிவிருத்திக்காக தெரிவுசெய்யப்பட்டுள்ளன. இதில் 124 பாடசாலைகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளவுள்ளனர்.

இந்த 124 பாடசாலைகளிலும் உடனடி அபிவிருத்திப் பணியாக 24 பாடசாலைகள் இவ்வருட துரித அபிவிருத்திக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. இதில் யாழ்.மாவட்டத்தில் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை, நெடுந்தீவு மகா வித்தியாலயம் ஆகிய இரு பாடசாலைகளுமே தெரிவுசெய்யப்பட்டு அபிவிருத்திப் பணிக்கான ஆரம்ப முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன.

இந்தப் பாடசாலைகளை தேர்ந்தெடுப்பதற்கு ஐந்து வருட புள்ளி விபரங்களை கவனத்தில் எடுத்துள்ளமை சரியான தெரிவுகளுக்கு சான்றாக அமைகின்றது. மாணவர்களின் கல்விசார், கல்விசாரா அடைவு மட்டங்களும் மிக முக்கியமான பங்காற்றியுள்ளது. நவோதயா திட்டத்தில் இந்தப் பாடசாலை உள்வாங்கப்படுவதற்கு - மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை 64 தேவைகளை முன்வைத்த போதிலும், அவசியமான உடனடித் தேவையாக 4 தேவைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்தப் பாடசாலைக்கு 80 லட்சம் ரூபா செலவில் இரு மாடி கணினி வளநிலையமும், 10 லட்சம் ரூபா செலவில் நூலக கட்டடமும் 30 ஆயிரம் ரூபா பெறுமதியான நூல்களும், க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான விஞ்ஞான ஆய்வுகூடத் தொகுதியும் முதல் கட்டமாக நிர்மாணிக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவற்றுடன் சிறு செலவுகளை உடனுக்குடன் நிறைவேற்றவும் பாடசாலையையும், அதன் சூழலையும் மெருகூட்டவும் 40 ஆயிரம் ரூபா காசும் கையளிக்கப்பட்டுள்ளது.

இவைதவிர வேறுசில கட்டுமானப் பணிகள் இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்ற போதிலும், உடனடி துரித அபிவிருத்தித் திட்டத்தினால் இந்தப் பாடசாலை மிக விரைவில் புதுப்பொலிவுடன் தேசிய பாடசாலைகளுக்கு நிகரான வசதி வாய்ப்புக்களுடன் மிளிரும் என்பதில் ஐயப்படத் தேவையில்லை.

இந்தத் திட்டத்துக்கான சகல பொறுப்புக்களும் அதிபரிடமே வழங்கப்பட்டமை இந்நடவடிக்கைகளின் வேகத்துக்கு உந்துசக்தியாக அமையும்.

இந்தப் பாடசாலை அதிபர் அ.மு. அருணாசலம் நவோதயா திட்டம் தொடர்பாக எம்முடன் தெரிவித்த கருத்துக்களை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கிறோம்.

கல்வி அமைச்சினால் முன்னெடுக்கப்பட்ட இந்தத் திட்டம் வரவேற்கத்தக்கது, மகிழ்ச்சிகரமானது. எமது பாடசாலையை இந்தத் திட்டத்திற்குள் கொண்டுவந்து மிக அவசியமான நான்கு உடனடித் தேவைகளை நிறைவேற்றும் வகையில் அதற்கான ஆரம்பப் பணிகளை மேற்கொள்வதற்கான மெருகூட்டல் செயற்பாடாக நாம் நவோதயா பாடசாலை வாரத்தை அரசாங்கம் அறிவித்தமைக்கு அமைவாக செயற்படுத்திவருகிறோம்.

இந்தப் பாடசாலை இனிவரும் காலங்களில் தேசிய பாடசாலைக்கான தகுதிகளைத் தன்னகத்தே கொண்டிருக்கும் என்பது மறுக்கமுடியாத உண்மை.

எமது பாடசாலைக்கான ஆசிரிய பற்றாக்குறையும் எதிர்வரும் ஜனவரி மாதமளவில் பூர்த்தி செய்வதாக கல்வி அமைச்சு அறிவித்ததானது- எமது பாடசாலை சமூகத்துக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தருகின்றது. இவ்வாறு தனது கருத்தைப் பகிர்ந்து கொண்டார் அதிபர்.

பாடசாலை அமைப்பு மற்றும் பௌதீக வளங்களை விருத்திசெய்யும் நோக்கில் பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் என பல்வேறுபட்ட தரப்பினருடன் பாடசாலை சமூகமும் இணைந்தே இந்த ஐந்து நாள் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன.

முதலாம் நாள் செப்ரெம்பர் 6 ஆம் திகதி ஆரம்ப நிகழ்வுகள் சமூக பங்கேற்பு தினமாக மேற்கொள்ளப்பட்டன. இதில் மரநடுகையுடன் பாடசாலை வளாகத்தினை சிரமதானம் மூலம் அழகுபடுத்தினர். இரண்டாம் நாள் மாணவத்தலைவர் தினம். இதில் அனைத்து மாணவத் தலைவர்களையும் கௌரவிக்கும் நோக்கில் அவர்களது திறமைகளையும், துறைசார் அனுபவங்களின் பகிர்வாக அமைந்தது.

மூன்றாம் நாள் சமய மற்றும் விழுமிய தினம். இதில் சமய சொற்பொழிவுகளுடன், சமய நிகழ்வுகள் இடம்பெற்றன. நான்காம் நாள் மொழி மற்றும் தொழில்நுட்ப தினம். இதில் மாணவர்களது மொழிப் பிரயோகத்துடன், அதிகரித்துவரும் தொழில்நுட்ப யுகம் தொடர்பான விழிப்புணர்வாக அமையும்.

ஐந்தாம் நாள் மாணவர் ஆற்றல்கள் மற்றும் செயற்பாட்டு தினம். இந்த இறுதி நாள் நிகழ்வில் மாணவர்களது திறன் வெளிப்படும் வகையில் கண்காட்சியுடன் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

நவோதயா துரித அபிவிருத்தித் திட்டம் 1998 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட போதிலும், இன்றுவரை அது பெயரளவிலேயே இருந்துள்ளது. இவ்வாண்டு முன்னெடுக்கப்பட்ட இந்தத் திட்டத்தின் மூலம் யாழ்ப்பாணத்தில் மிக விரைவில் சகல வசதி வாய்ப்புக்களுடன் கூடிய ஓர் பாடசாலையான தேசிய பாடசாலைகளின் தரத்தை ஒத்ததாக மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை மிளிரும்.

இதனால் இந்தப் பிரதேசம் மட்டுமன்றி - கோட்டம், வலயம், மாவட்டத்திற்குக் கூட பெரும் பெருமை சேர்க்கக்கூடிய மாணவர்கள் வெளிவரவுள்ளனர்.

இந்தத் துரித அபிவிருத்தித் திட்டம் முழுமை பெறுவதற்கு தகுதியான அனைவரும் பாடசாலை சமூகத்துடன் ஒத்துழைத்து நவீன யுகத்துக்குரிய திறனுள்ள மாணவர்களாக வளர்த்து பாடசாலைக்கும், பிரதேசத்துக்கும் பெருமை சேர்க்க வேண்டியது மாணவர்களது பொறுப்பே. ◆

**ஊடகவியல்**

**சே.ஜெயானந்தன்**

# இலைமறை காயாக உள்ள கலைஞர்களின் எதிர்காலத்தை வளம்படுத்தும் ஓர் வெகுஜன ஊடக நிறுவனம் எம்.எம்.ஐ.சி

இந்த நூற்றாண்டின் இன்றைய சூழ்நிலையானது குடும்ப பொருளாதார முறையில் பெரும் பற்றாக்குறை விளைவினையே தோற்றுவித்ததெனலாம். இந்த நிலையானது குடும்பவாழ்க்கை முறையில் பால் வேறுபாடுகள் இன்றி அனைவருமே தொழில் நாட்டம் கொள்ள வேண்டிய இக்கட்டான சூழ்நிலையைத் தோற்றுவித்துள்ளது.

இவ்வாறு, குடும்ப சமூக அமைப்பிடையே பெருக்கெடுத்த தொழில் நாட்டமானது, தொழில்நுகர்வோருக்கான நிரம்பலை அதிகரித்தது. ஆனால், இத்தகைய நிரம்பல் விரிவுக்கு ஏற்ப அரச பொருளாதாரமானது வளர்ச்சி கண்டுகொள்ளவில்லை.

இதன்விளைவாக, இன்றைய நடைமுறை அரசின் சுருக்கமடைந்த தொழில் கொள்கையானது - பெருவாரியான தொழில் கேள்வியினை உருவாக்க முடியாது போனது. இதன் காரணமாக நாட்டில் வேலையற்றோர் படையானது விரிவாக்கம் கண்டுகொண்டு சென்றது.

இவ்வாறு விரிவாக்கம் பெற்ற வேலையற்றோர் படையினால் ஒருவர் அரச தொழில் வாய்ப்பினைப் பெற, பெரும் போட்டி மற்றும் செல்வாக்குப் பிரயோகம் என்பவற்றைச் சந்திக்க வேண்டி ஏற்பட்டது.

இதனால் வேலையற்றோர் தொழில் படையில் ஓர் 'குமுறல் நிலை' தோற்றம் பெற்றதெனலாம். இதன் எதிரொலியாக ஆர்ப்பாட்டங்கள், பேரணிகள், சத்தியாக்கிரகப் போராட்டங்கள் என்பனவும் இவை சார்ந்த ஏனைய நடவடிக்கைகளும் விரிவு பெற்றுக்கொண்டன.

ஆனால், இவற்றினை ஓரளவில் சீர் செய்வதாக, தனியார் துறையில் ஏற்பட்ட வளர்ச்சியும் மற்றும் அவர்களின் கொள்கை மாற்றமும் தொழில் நுகர்வோருக்கான கேள்வியில் விரிவாக்கத்தினை ஏற்படுத்தியதெனலாம்.

எனினும், இவ்வாறு விரிவாக்கம் கண்ட தனியார்துறை சந்தை வாய்ப்புக் கேள்விக்கு ஏற்ப - நிகழ்கால தொழில் பெறுவோரின் உள்வருகை அதிகரிக்கப்படாது குறைவாகவே காணப்பட்டது.

இதற்கு பிரதான காரணமாக தனியார்துறையில் காணப்பட்ட வேலைவாய்ப்புக்கு ஏற்ப, வேலையற்று வேலை தேடிக் காத்திருக்கும் ஊழியப்படை போதிய தகுதியினையோ அல்லது சிறந்த பட்டறிவினையோ அல்லது அதனை ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவத்தினையோ கொண்டிருக்கவில்லை என்பதாகும்.

இதனாலேயே தனியார் நிறுவனங்கள் பல தனித்தும் அல்லது அரச ஆதரவுடனும் எதிர்கால தொழில் சந்தை கேள்விக்கு ஏற்ப கல்வி முறைகளை அல்லது தொழிற்பயிற்சியுடன் கூடிய பட்டறிவினை வழங்கத் துணிந்தன.

இந்தவகையில் இலங்கையில் வெகுஜன ஊடகத்துறை நிறுவனமானது இலைமறை காய்களாக இருக்கும் கலைஞர்களை இனங்கண்டு அவர்களின் திறமைகளை வெளிக்கொணர்வதனூடாக அவர்களை சமூக வாழ்வுக்கு ஏற்றதாக மாற்றம் செய்யவும், ஏற்கனவே இனங்காணப்பட்ட கலைஞர்களை மேலும் வளப்படுத்தவும் '**Mass Media Institute of Ceylon**' (**M.M.I.C**) எனும் அமைப்பினை நிறுவி அவர்களுக்கு கற்பித்தலுடன்கூடிய பயிற்சியும் கொடுத்து வருகின்றது.


இந்த நிறுவனத்தில் கலை ஆர்வம் உள்ள அனைவரும் அனுமதியினைப் பெற்றுக்கொள்ளமுடியும். இதற்கென பிரத்தியேக தகமைகள் எதுவும் கிடையாது.

ஆனாலும், ஒலிபரப்பாளர் ஆக வேண்டும் என்ற இலட்சியம் கொண்டவர்களுக்கு க.பொ.த சாதாரண தரத்தில் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

நல்ல குரல் வளமும், வாசிப்புத் திறனும் கற்பனை வளத்துடன்கூடிய ஆர்வமும் இருந்தால் போதுமானதாகும். இங்கு, உங்களது ஆர்வமும் முயற்சியுமே உங்களை எதிர்காலத்தில் முன்னேற்ற வழிவகுக்கும்.

மேலும் இப்பயிற்சி நெறியினை நீங்கள் உங்கள் வீடுகளிலிருந்து கொண்டே தொலைக்காட்சி (தபால் மூலம்) கற்றுக்கொள்ளலாம்.

இப்பயிற்சி நெறிக்கான காலம் ஆறு மாதங்களாகும். இப்பயிற்சி







நெறியை முடித்தவர்களுக்கு டிப்ளோமா சான்றிதழ் வழங்கப்படுகின்றது. இவர்கள் இத்தகைய சான்றிதழைப் பெற கலையகப் பயிற்சியுடன் கூடிய எழுத்துப் பரீட்சை ஒன்றுக்கு தோற்றுதல்வேண்டும்.

இப்பயிற்சி நெறியினைக் கற்பதற்கு மொத்தமாக (6 மாதத்திற்கு மானது) 5200 அறவிடப்படுகின்றது. இதில் 1000 ரூபா அனுமதிக்கட்டணமாகவும், மிகுதி தவணை முறையில் செலுத்தக்கூடிய நெகிழ்ச்சிப் போக்கும் காணப்படுகின்றது. நேரடிப் பயிற்சிகளுக்கு 4800 ரூபா.

இப்பயிற்சி நெறியானது பின்வரும் பாட விதானங்களை உள்ளடக்கியுள்ளது.

பகுதி 'ஏ'

1. பொதுசனத் தொடர்புத்துறை
2. இலங்கையில் வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை வரலாறு.
3. மொழி அறிவை வளர்த்தல்.
4. விஞ்ஞான தொழில்நுட்ப புதுமைகள், இணைய மூலம் உருவாகும் புதிய வானொலிகள்.

பகுதி 'பி'

5. அறிவிப்பாளர் என்பவர் யார்? அவரது பொறுப்புக்கள் எவை?
6. உச்சரிப்பின் முக்கியத்துவம்.
7. சமூகத்தில் அறிவிப்பாளருக்கான இடம்.
8. மூத்த ஒலிபரப்பாளர்களின் அனுபவங்கள்.
9. அறிவிப்பாளருக்கு இருக்க வேண்டிய தொழில்நுட்ப அறிவு.
10. செய்தி என்றால் என்ன?
11. இணையம், மின் அஞ்சல் மூலம் செய்திகளைப் பெறல்.
12. செய்தி எழுதுதல், வாசித்தல்.
13. தொலைக்காட்சி, வானொலி செய்திப் பிரிவின் அமைப்பும் உள்ளடக்கமும்.

பகுதி 'சி'

14. விளம்பரத்துறை
15. வர்த்தக விளம்பரப் பிரிவு
16. விளம்பர நிறுவனங்களும், படைப்பாற்றலும்.
17. விஞ்ஞான ரீதியான விளம்பரத் தயாரிப்பு
18. மேடை நிகழ்ச்சிகளைத் தொகுத்தளித்தல் அல்லது வழங்குதல்.
19. நபர்களுக்கு இடையிலான தொடர்பாடல்.
20. கலையகப் பயிற்சி.

எனவே, இத்தகைய துறைகளில் தனியார் வேலை வாய்ப்புச் சந்தையில் அதிகளவான கேள்வி வாய்ப்பு இருப்பதனால் இப்படிப்பட்ட பயிற்சி நெறிகளைக் கற்று நீங்களும் உங்கள் குடும்பத்தினையும் அதனோடு சேர்ந்த தேசத்தையும் வளம்படுத்திக்கொள்ளலாம்.

இதற்காக ஆர்வமுள்ள அனைவரும் மேலதிக விபரங்களைப் பெற நாடவேண்டிய முகவரி

**M.M.I.C**
**2 nd Floor 'Colombo Plaza'**
**50, Galle Road,**
**Colombo - 06**
**Tel/Fax:- 074 - 512830**
**Mobile:- 077 - 316258**

**M.M.I.C** ஒலிபரப்புக் கல்லூரி,
இல 15, சிறாம்பையடி ஒழுங்கை,
ஸ்ரான்லி வீதி (மணியம் கட்டடம்),
யாழ்ப்பாணம்.

இவை அனைத்தும் உங்களுக்குள்ளே ஒளிந்திருக்கும் திறமைகளை வெளிக்காட்டும் என்பது திண்ணம்.

**"வானலையில் உங்கள் குரல்கள் ஒலிக்கட்டும்**
**அது தேனருவியாய் எங்கள் காதில் கொட்டட்டும்"** ❖

# தமிழீழ மீட்புநிதிக் கடன் மீளளிப்பு - 2004

## கோப்பாய் உதவி அரச அதிபர் பிரிவு

1. யா/கோ/ 14 திரு. சண்முகம் இளையதம்பி
2. யா/கோ/ 80 திரு. பொன்னையா புண்ணியமூர்த்தி
3. யா/கோ/ 132 செல்வி. நிர்மலாதேவி சங்கரப்பிள்ளை
4. யா/கோ/ 134 திரு. வினாசித்தம்பி சிவஞானசுந்தரம்
5. யா/கோ/ 319 திரு. கதிரவேலு பாலசிங்கம்
6. யா/கோ/ 325 திரு. சிவ்லை அரியகுட்டி
7. யா/கோ/ 329 திரு. சதாசிவக்குருக்கள் அண்ணாசாமிஐயர்
8. யா/கோ/ 337 திரு. சின்னட்டி ஆசையன்
9. யா/கோ/ 360 திரு. மூத்ததம்பி காசிப்பிள்ளை
10. யா/கோ/ 394 திரு. கந்தப்பு முருகேசு
11. யா/கோ/ 439 திரு. சிதம்பரநாதர் சுப்பிரமணியம்
12. யா/கோ/ 445 திரு. கந்தையா சின்னையா
13. யா/கோ/ 519 திரு. சுப்பிரமணியம் வைரமுத்து
14. யா/கோ/ 609 திரு. சின்னத்தம்பி அன்னலிங்கம்
15. யா/கோ/ 671 திருமதி. லீலா புவிராசன்
16. யா/கோ/ 732 திரு. தம்பு இராசதுரை
17. யா/கோ/ 744 திரு. சபாபதி இரத்தினசிங்கம்
18. யா/கோ/ 793 திரு. செல்லையா சிவராசா
19. யா/கோ/ 844 திரு. சின்னையா தர்மகுலசிங்கம்
20. யா/கோ/ 862 திரு. செல்லையா வல்லிபுரம்
21. யா/கோ/ 968 திரு. பெரியார் சிவபாதம்
22. யா/கோ/ 991 திரு. வயிரவிப்பிள்ளை செல்லையா
23. யா/கோ/ 1043 திரு. இராமலிங்கம் பொன்னையா
24. யா/கோ/ 1085 திரு. சின்னப்பு இராசையா
25. யா/கோ/ 1119 திரு. றெஜினோல்ட் விக்டர் கிருபைரத்தினம் டானியல்
26. யா/கோ/ 1157 திரு. கயிலாசபிள்ளை வேலாயுதபிள்ளை
27. யா/கோ/ 1314 திரு. அப்பாப்பிள்ளை இரத்தினம்
28. யா/கோ/ 1321 திரு. நாகமுத்தர் இராமநாதன்
29. யா/கோ/ 1343 திரு. சின்னப்பா செல்வராசா
30. யா/கோ/ 1345 திரு. அன்பு சின்னப்பா செல்வராசா
31. யா/கோ/ 1350 திரு. ஐயன் சின்னப்பு
32. யா/கோ/ 1412 திரு. இராமு சின்னத்தம்பி
33. யா/கோ/ 1424 திரு. மயில்வாகனம் தம்பிப்பிள்ளை
34. யா/கோ/ 1584 திரு. வைரமுத்து செல்லத்துரை
35. யா/கோ/ 1601 திரு. சுப்ரமணியஐயர் சண்முகரத்தினசர்மா
36. யா/கோ/ 1674 திரு. முருகேசு குமரையா
37. யா/கோ/ 1685 திரு. கந்தப்பர் சண்முகம்பிள்ளை முத்துவேல்
38. யா/கோ/ 1686 திரு. கந்தையா மயில்வாகனம்
39. யா/கோ/ 1707 திருமதி. பொன்னம்மா சுப்பிரமணியம்
40. யா/கோ/ 1711 திரு. கனகசபை இராஜசபை
41. யா/கோ/ 1733 திரு. கார்த்திகேசு செல்லத்துரை
42. யா/கோ/ 1757 திரு. வேலுப்பிள்ளை செல்லையா
43. யா/கோ/ 1781 திரு. கந்தையா விசுவலிங்கம்
44. யா/கோ/ 1811 திரு. ஆறுமுகம் காசிநாதர்
45. யா/கோ/ 1822 திருமதி. கலாவதி விசயகாந்தன்
46. யா/கோ/ 1823 திரு. முருகேசு கந்தையா
47. யா/கோ/ 1878 திரு. சின்னத்தம்பி பெருமாள்
48. யா/கோ/ 1888 திரு. விசுவநாதர் இராசரத்தினம்
49. யா/கோ/ 1942 திரு. ஆறுமுகம் துரைச்சாமி
50. யா/கோ/ 1944 திரு. நாகலிங்கம் தம்பிமுத்து
51. யா/கோ/ 2022 திரு. கந்தையா கார்த்திகேசு
52. யா/கோ/ 2053 திரு. கார்த்திகேசு முத்தையா
53. யா/கோ/ 2079 திரு. வயிரமுத்து பொன்னம்பலம்
54. யா/கோ/ 2111 திரு. சுப்பையா இராசையா
55. யா/கோ/ 2123 திரு. சபாபதிப்பிள்ளை இராசையா
56. யா/கோ/ 2144 திரு. குழந்தைவேல் சாமுவேல் சுப்பிரமணியம்
57. யா/கோ/ 2165 திரு. தம்பிப்பிள்ளை சொக்கலிங்கம்
58. யா/கோ/ 2169 திரு. தம்பு சண்முகராசா
59. யா/கோ/ 2212 திரு. பசுபதி தேவராசா
60. யா/கோ/ 2238 திரு. செல்லத்துரை அருள்பிரகாசம்
61. யா/கோ/ 2310 திரு. இளையதம்பி அருளையா
62. யா/கோ/ 2389 திரு. யோன் அலெக்சாண்டர் சின்னப்பு அருளானந்தம்
63. யா/கோ/ 2408 திரு. கந்தர் முருகேசு
64. யா/கோ/ 2509 திரு. முருகேசு சிதம்பரநாதன்
65. யா/கோ/ 2511 திரு. தம்பிப்பிள்ளை விஸ்வலிங்கம்
66. யா/கோ/ 2593 திரு. சின்னத்தம்பி இளையகுட்டி
67. யா/கோ/ 2612 திரு. இ.வேலாயுதர் கந்தையா
68. யா/கோ/ 2623 திரு. கந்தன் கிருஷ்ணன்
69. யா/கோ/ 2646 திருமதி. லீலாவதி பாலகிருஸ்ணர்
70. யா/கோ/ 2669 திரு. கதிரேசு நடராசா
71. யா/கோ/ 2671 திரு. நவரத்தினம் சிறிமுருகதாஸ் காந்தன்
72. யா/கோ/ 2722 திரு. வேலாயுதர் இராமசுவாமி
73. யா/கோ/ 2769 திரு. சந்தன் சின்னையா
74. யா/கோ/ 2892 திரு. வேலுப்பிள்ளை ஆறுமுகம்
75. யா/கோ/ 2977 திரு. கார்த்திகேசு சுப்பிரமணியம்
76. யா/கோ/ 2999 திரு. கதிரவேலுப்பிள்ளை சிதம்பரநாதன்
77. யா/கோ/ 3274 திருமதி. தவமணி செல்வராசா
78. யா/கோ/ 3278 திரு. கந்தையா துரைசிங்கம்
79. யா/கோ/ 3343 திருமதி. கௌரி சிவராசா
80. யா/கோ/ 3367 திரு. தம்பையா நடராசா
81. யா/கோ/ 3372 திரு. சின்னத்துரை நடராசா
82. யா/கோ/ 3451 திரு. முருகேசு சின்னத்தம்பி
83. யா/கோ/ 3468 திருமதி. தேவகியம்மா பாலசுப்பிரமணியம்
84. யா/கோ/ 3491 திரு. நடராஜா வரதராஜா
85. யா/கோ/ 3494 திரு. முத்துத்தம்பி வைத்தியலிங்கம்
86. யா/கோ/ 3512 திருமதி. அமுதரத்னம் கந்தையா
87. யா/கோ/ 3561 திரு. தில்லையம்பலம் கனகரத்தினம்
88. யா/கோ/ 3602 திருமதி. நந்தினி சிவாகரன்
89. யா/கோ/ 3629 திரு. கந்தையா இராசையா
90. யா/கோ/ 3675 திரு. தங்கசாமிஐயர் சற்குணனந்தசர்மா
91. யா/கோ/ 3686 திரு. தம்பிமுத்து தம்பிராசா
92. யா/கோ/ 3754 திரு. சுப்பர் வல்லிபுரம்
93. யா/கோ/ 3772 திரு. செபமாலை டானியல்
94. யா/கோ/ 3792 திரு. சிவப்பிரகாசம் குமாரசுவாமி
95. யா/கோ/ 3796 திரு. யோசேப் கொன்ஸ்ரன்ரைன்
96. யா/கோ/ 3820 திரு. செல்லப்பா கணபதிப்பிள்ளை
97. யா/கோ/ 3849 திரு. பரமு நடராசா
98. யா/கோ/ 3893 திரு. கதிரித்தம்பி இரத்தினசபாபதி
99. யா/கோ/ 3936 திரு. சபாபதிஐயா சோமசுந்தரம் ஐயா
100. யா/கோ/ 3948 திரு. சின்னத்துரை செல்வராசா
101. யா/கோ/ 4065 திரு. வேலுப்பிள்ளை பொன்னுத்துரை
102. யா/கோ/ 4112 திரு. கந்தையா தம்பு
103. யா/கோ/ 4137 திரு. பொன்னுத்துரை பாலசுப்பிரமணியம்
104. யா/கோ/ 4140 திரு. சுவாமிநாதர் இளையதம்பி
105. யா/கோ/ 4148 திரு. கணபதிப்பிள்ளை குமாரசுவாமி
106. யா/கோ/ 4149 திரு. ஆறுமுகம் கந்தையா
107. யா/கோ/ 4151 திரு. கந்தையா காசிலிங்கம்
108. யா/கோ/ 4152 திரு. வைரமுத்து கணபதிப்பிள்ளை
109. யா/கோ/ 4192 திரு. கணபதிப்பிள்ளை கிருஷ்ணர்
110. யா/கோ/ 4217 திரு. தம்பையா முருகுப்பிள்ளை
111. யா/கோ/ 4233 திரு. வல்லிபுரம் நாகலிங்கம்
112. யா/கோ/ 4235 திரு. வேலுப்பிள்ளை நமசிவாயம்
113. யா/கோ/ 4269 திரு. செல்லையா சிவநேசன்
114. யா/கோ/ 4524 திருமதி. சந்திரவதனி பரந்தாமன்
115. யா/கோ/ 4573 திரு. சுப்பிரமணியம் சற்குணேஸ்வரன்
116. யா/கோ/ 4598 திருமதி. இராசம் இராமநாதன்
117. யா/கோ/ 4616 திரு. பொன்னம்பலம் இராமநாதன்
118. யா/கோ/ 4620 திரு. தில்லைநாதர் ஆறுமுகம்
119. யா/கோ/ 4639 திரு. தம்பையா காசிநாதர்
120. யா/கோ/ 4665 திரு. வைரமுத்து குமாரசாமி
121. யா/கோ/ 4705 திரு. சின்னவன் நெல்லியன்
122. யா/கோ/ 4731 திரு. மயில்வாகனம் பூதத்தம்பி
123. யா/கோ/ 4770 திரு. வல்லிபுரம் சின்னையா இராஜதுரை
124. யா/கோ/ 4793 திரு. சிதம்பரப்பிள்ளை சின்னத்தம்பி
125. யா/கோ/ 4803 திரு. இளையதம்பி செல்லத்துரை
126. யா/கோ/ 4823 திரு. கந்தையா சின்னத்தம்பி
127. யா/கோ/ 4833 திரு. சின்னத்துரை செல்லப்பா
128. யா/கோ/ 4869 திரு. கந்தையா வைத்தியநாதன்
129. யா/கோ/ 4891 திரு. கந்தையா இராசதுரை
130. யா/கோ/ 4909 திரு. நாகலிங்கம் பாலகிருஷ்ணன்
131. யா/கோ/ 4949 திருமதி. இராசலட்சுமி தனபாலசிங்கம்
132. யா/கோ/ 4956 திருமதி. இராசம்மா இராமுப்பிள்ளை
133. யா/கோ/ 4990 திருமதி. அம்பிகை நடராசா
134. யா/கோ/ 5011 திரு. கந்தையா செல்லத்துரை ஜெகதீஸ்வரன்
135. யா/கோ/ 5030 திருமதி. மேசி இராசமலர் குணசேகரம்
136. யா/கோ/ 5142 திரு. மாணிக்கம் சிவசம்பு
137. யா/கோ/ 5176 திருமதி. புவனேஸ்வரி இரத்தினசிங்கம்
138. யா/கோ/ 5245 திரு. இளையதம்பி சுப்பிரமணியம்
139. யா/கோ/ 5255 செல்வி. ரமணி தர்மலிங்கம்
140. யா/கோ/ 5270 திருமதி. இராஜலட்சுமி தங்கராசா
141. யா/கோ/ 5277 திருமதி. தில்லைப்பிள்ளை நடராசா
142. யா/கோ/ 5326 திரு. தி.சுவாமிநாதர் குமாரசாமி
143. யா/கோ/ 5371 திரு. நாகப்பர் கந்தையா நல்லதம்பி
144. யா/கோ/ 5469 திருமதி. விமலாதேவி தெய்வேந்திரன்
145. யா/கோ/ 5477 திருமதி. அரசம்மா சின்னத்தம்பி
146. யா/கோ/ 5486 திரு. சண்முகம் பாலசுப்பிரமணியம்
147. யா/கோ/ 5511 திரு. சின்னத்தம்பி காசிநாதன்
148. யா/கோ/ 5564 திரு. நவரட்ணம் இந்திரகுமார்
149. யா/கோ/ 5616 திரு. தம்பாபிள்ளை சந்திரசேகரம்
150. யா/கோ/ 5622 திருமதி. தவமணி முத்தையா
151. யா/கோ/ 5641 திரு. வேதக்குட்டி விஜயரத்தினம்
152. யா/கோ/ 5701 திரு. வரப்பிரகாசம் சம்மிக்கேல்
153. யா/கோ/ 5752 திரு. சின்னப்பு குட்டித்தம்பி
154. யா/கோ/ 5782 திருமதி. மகேஸ்வரி நாகரத்தினம்
155. யா/கோ/ 5783 திருமதி. மகேஸ்வரி திருநாவுக்கரசு
156. யா/கோ/ 5797 திரு. செல்லையா நடராசா
157. யா/கோ/ 5879 திரு. வேலுப்பிள்ளை துரைசிங்கம்
158. யா/கோ/ 5910 திரு. சீனிவாசகம் நடராசா
159. யா/கோ/ 5943 திரு. முத்துக்குமாரு சிங்கராசா
160. யா/கோ/ 6096 திரு. செல்லையா சுப்பிரமணியம்
161. யா/கோ/ 6127 திரு. தில்லையம்பலம் வல்லிபுரம்
162. யா/கோ/ 6143 திரு. பொன்னுச்சாமி ஆறுமுகநாதன்
163. யா/கோ/ 6157 திருமதி. விசாலாட்சி பாலசுப்பிரமணியம்
164. யா/கோ/ 6165 திருமதி. சின்னத்தங்கச்சி சின்னத்துரை
165. யா/கோ/ 6194 திருமதி. குழந்தையார் வீரசிங்கம்
166. யா/கோ/ 6198 திரு. ஆறுமுகம் கிருஷ்ணவேலாயுதம்
167. யா/கோ/ 6285 திருமதி. சிவஞானவதி கனகரத்தினம்
168. யா/கோ/ 6293 செல்வி. இராஜேஸ்வரி நல்லையா
169. யா/கோ/ 6307 திரு. சபாபதி செல்லத்துரை
170. யா/கோ/ 6323 திரு. சிவகுரு கணபதிப்பிள்ளை
171. யா/கோ/ 6327 திரு. காசிப்பிள்ளை இராஜசேகரம்
172. யா/கோ/ 6401 திரு. கந்தர் விசுவலிங்கம்
173. யா/கோ/ 6404 திரு. கணபதிப்பிள்ளை நாகலிங்கம்
174. யா/கோ/ 6519 திரு. பொன்னையா இராசரத்தினம்
175. யா/கோ/ 6547 திரு. செல்லப்பா செல்லத்துரை
176. யா/கோ/ 6569 திரு. சின்னையா சிவசம்பு
177. யா/கோ/ 6586 திரு. சின்னவன் புதியான்
178. யா/கோ/ 6644 திரு. மயிலு கந்தையா
179. யா/கோ/ 6718 திரு. இராமையா நவரத்தினக்குருக்கள்
180. யா/கோ/ 6739 திரு. வைத்திலிங்கம் சரவணமுத்து
181. யா/கோ/ 6740 திரு. அருணாசலம் சபாரத்தினம்
182. யா/கோ/ 6759 திருமதி. பரமேஸ்வரி குலசேகரம்
183. யா/கோ/ 6762 திருமதி. வத்சலா கமலதாஸ்
184. யா/கோ/ 6920 திருமதி. யோகேஸ்வரி பாஸ்கரதாசன்
185. யா/கோ/ 6929 திரு. சோமசுந்தரம் வீரசிங்கம்
186. யா/கோ/ 6952 செல்வி. கிருஷ்ணகலாநிதி மாணிக்கம்
187. யா/கோ/ 7076 திரு. சின்னராசா பாலசிங்கம்
188. யா/கோ/ 7082 திரு. வெற்றிவேலு முத்துக்குமாரு
189. யா/கோ/ 7115 திரு. ஆறுமுகம் ஐயாத்துரை
190. யா/கோ/ 7139 திரு. சின்னத்தம்பி அப்பாப்பிள்ளை
191. யா/கோ/ 7163 திருமதி. திரவியம் அந்தோனிப்பிள்ளை
192. யா/கோ/ 7164 திரு. பொன்னம்பலம் இராசரத்தினம்
193. யா/கோ/ 7165 திரு. முருகேசு சின்னத்தம்பி
194. யா/கோ/ 7221 திரு. முத்துத்தம்பி கனகஇரத்தினம்
195. யா/கோ/ 7235 திரு. முருகர் செல்வம்
196. யா/கோ/ 7239 திருமதி. நாகபிள்ளை குமாரவேல்
197. யா/கோ/ 7256 திரு. நாகமுத்து சிவஞானம்
198. யா/கோ/ 7261 திரு. சின்னத்துரை சொர்ணலிங்கம்
199. யா/கோ/ 7395 திரு. கந்தர் வைத்திலிங்கம்
200. யா/கோ/ 7405 திருமதி. மகேஸ்வரி இரத்தினசிங்கம்
201. யா/கோ/ 7414 செல்வி. கமலாதேவி இராசரத்தினம்
202. யா/கோ/ 7432 திருமதி. யோகராணி மகாலிங்கம்
203. யா/கோ/ 7512 திருமதி. சின்னம்மா வினாசித்தம்பி
204. யா/கோ/ 7531 திரு. சபாபதிபிள்ளை சிவசம்பு
205. யா/கோ/ 7542 திரு. வயித்திலிங்கம் செல்லத்துரை
206. யா/கோ/ 7547 திரு. பண்டாரி செல்லர்
207. யா/கோ/ 7555 திரு. கணபதிப்பிள்ளை வேலுப்பிள்ளை
208. யா/கோ/ 7570 திரு. பொன்னயைா மார்க்கண்டு
209. யா/கோ/ 7620 திரு. சுப்பிரமணியக்குருக்கள் இரங்கசாமி ஐயர்
210. யா/கோ/ 7630 திரு. தில்லையம்பலம் பொன்னம்பலம்
211. யா/கோ/ 7648 திரு. விற்சுவர் கந்தையா
212. யா/கோ/ 7653 திரு. சுப்பிரமணியஐயர் கார்த்திகேசுஐயர்
213. யா/கோ/ 7688 திரு. இராசதுரை தில்லைராஜன்
214. யா/கோ/ 7694 திரு. சின்னத்தம்பி வைரமுத்து
215. யா/கோ/ 7703 திரு. மாரிமுத்து கந்தசாமி
216. யா/கோ/ 7705 திரு. மூத்தான் பொன்னு
217. யா/கோ/ 7762 திரு. தம்பிப்பிள்ளை பொன்னையா
218. யா/கோ/ 7770 திருமதி. இராசம்மா கதிரவேலு
219. யா/கோ/ 7796 திருமதி. சின்னம்மா தம்பையா
220. யா/கோ/ 7882 திரு. செல்லப்பா நடராசா
221. யா/கோ/ 7891 திருமதி. தங்கமணி இராமுப்பிள்ளை
222. யா/கோ/ 7893 திரு. சோமசுந்தரம் மயில்வாகனம்
223. யா/கோ/ 7899 திரு. வரப்பிரகாசம் யோசப்
224. யா/கோ/ 7902 திரு. பொன்னம்பலம் சின்னத்தம்பி
225. யா/கோ/ 7919 திருமதி. பவளம்மா இராசையா
226. யா/கோ/ 7922 திரு. அருளம்பலம் சர்வேஸ்வரன்
227. யா/கோ/ 7942 திரு. கந்தன் சின்னக்கிளி
228. யா/கோ/ 8003 திரு. ஆறுமுகம் குமாரசுவாமி
229. யா/கோ/ 8021 திரு. கந்தையா துரைஐயா
230. யா/கோ/ 8044 திரு. ஆழ்வார் சுப்பிரமணியம்
231. யா/கோ/ 8049 திருமதி. சின்னத்தங்கம் செல்லமுத்து
232. யா/கோ/ 8074 திருமதி. சரஸ்வதி இராமகிருஷ்ண மூர்த்தி
233. யா/கோ/ 8076 திரு. தம்பையா வேலும்மயிலும்
234. யா/கோ/ 8120 திரு. நாகமுத்து முருகேசு
235. யா/கோ/ 8148 திருமதி. பொன்னம்மா வேலுப்பிள்ளை
236. யா/கோ/ 8162 திருமதி. குகனேஸ்வரி தருமரத்தினம்
237. யா/கோ/ 8164 திரு. சின்னவன் பாலன்
238. யா/கோ/ 8171 திரு. சீனியன் செல்வரத்தினம்
239. யா/கோ/ 8178 திரு. இராசதுரை இராசேந்திரம்
240. யா/கோ/ 8207 திரு. வீரகத்தி சின்னையா
241. யா/கோ/ 8211 திருமதி. ஞானேஸ்வரி கந்தசாமி
242. யா/கோ/ 8212 திரு. மாப்பாணர் கணேசு
243. யா/கோ/ 8215 திரு. முருகேசு செல்லத்துரை
244. யா/கோ/ 8272 திரு. சின்னக்குட்டி மார்க்கண்டு
245. யா/கோ/ 8275 திரு. நாராயணப்பிள்ளை அருணகிரிநாதன்
246. யா/கோ/ 8347 திரு. சின்னையா இளையதம்பி
247. யா/கோ/ 8411 திருமதி. நாகம்மா சின்னத்தம்பி
248. யா/கோ/ 8413 திருமதி. பாறி இராமன்
249. யா/கோ/ 8415 திருமதி. மனோன்மணி செல்லப்பா
250. யா/கோ/ 8439 திரு. கந்தன் கோவிந்தன்
251. யா/கோ/ 8456 திரு. விஸ்வலிங்கம் சிவநேசன்
252. யா/கோ/ 8486 திரு. தோரையன் வல்லி
253. யா/கோ/ 8492 திரு. அழகரத்தினம் இலட்சுமணன்
254. யா/கோ/ 8541 திரு. தில்லையர் கந்தையா
255. யா/கோ/ 8576 திரு. கணவதிப்பிள்ளை இராமநாதன்
256. யா/கோ/ 8596 திரு. சின்னத்தம்பி கந்தையா
257. யா/கோ/ 8605 திரு. சிதம்பரி வைத்திலிங்கம்
258. யா/கோ/ 8607 திருமதி. இரத்தினம் வீரசிங்கம்
259. யா/கோ/ 8652 திரு. வேலுப்பிள்ளை செல்லையா
260. யா/கோ/ 8656 திரு. சின்னையா இராமலிங்கம்
261. யா/கோ/ 8666 திருமதி. கோகிலாம்பாள் திருச்செல்வம்
262. யா/கோ/ 8671 திரு. வேலாயுதம் சுப்பிரமணியம்
263. யா/கோ/ 8681 திரு. சின்னத்தம்பி முருகேசு
264. யா/கோ/ 8691 திரு. வல்லிபுரம் நடராசா
265. யா/கோ/ 8693 திரு. பூதப்பிள்ளை ஆறுமுகம்
266. யா/கோ/ 8695 திரு. சின்னப்பு சின்னத்தம்பி
267. யா/கோ/ 8698 திருமதி. மரகதவல்லி சிவஞானம்
268. யா/கோ/ 8719 திரு. கந்தப்பிள்ளை செல்லத்துரை
269. யா/கோ/ 8740 திருமதி. அம்மிணிப்பிள்ளை இராசையா
270. யா/கோ/ 8782 திருமதி. இந்திராணி சிவானந்தராசா
271. யா/கோ/ 8810 திருமதி. இந்திராதேவி கோபாலரத்தினம்
272. யா/கோ/ 8831 திருமதி. கனகமணி ஜெயராசா
273. யா/கோ/ 8846 திரு. கதிரவேலு சுப்பிரமணியம்
274. யா/கோ/ 8858 திரு. வல்லிபுரம் சின்னையா
275. யா/கோ/ 8882 திரு. மயில்வாகனம் இரத்தினம்
276. யா/கோ/ 8897 திரு. அப்பர் விநாசித்தம்பி
277. யா/கோ/ 8947 திரு. முத்துத்தம்பி தேவராசா
278. யா/கோ/ 8960 செல்வி. மணிமேகலை செல்லையா
279. யா/கோ/ 8961 திரு. நமசிவாயாம் இராமலிங்கம்
280. யா/கோ/ 8964 திரு. சீவரட்ணம் பாலகிருஷனன்
281. யா/கோ/ 8972 திரு. ஆறுமுகம் சின்னத்துரை
282. யா/கோ/ 8992 திரு. ஆண்டி சிவலை
283. யா/கோ/ 8994 திரு. வைத்திலிங்கம் கணபதிப்பிள்ளைஐயர்
284. யா/கோ/ 9025 திரு. ஆறுமுகத்தான் சின்னத்துரை
285. யா/கோ/ 9080 திருமதி. பொன்னம்மா கந்தையா
286. யா/கோ/9098 திரு. செல்லையா வன்னியசிங்கம்

(மிகுதி நாளை தொடரும்)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# எழுதுவினைஞர் ஆட்சேர்ப்பு 2668 பேருக்கு நேர்முகப்பரீட்சை!

2002 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட அரசாங்க எழுதுவினைஞர் சேவை மற்றும் அதனுடன் இணைந்த சேவைகளுக்கு நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த 2 ஆயிரத்து 668 பேருக்கு நேர்முகப் பரீட்சையை நடத்த பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

மாவட்ட மட்டத்தில் வெளியிடப்பட்ட வெட்டுப் புள்ளிகளின் அடிப்படையில் சாதாரண பொது எழுதுவினைஞர் சேவையில் இணைத்துக் கொள்வதற்கான அதிகூடிய வெட்டுப் புள்ளியாக காலி மாவட்டத்துக்கு 143 புள்ளிகள் வழங்கப்பட்டுள்ளது.

அம்பாந்தோட்டை மாவட்டத்துக்கான வெட்டுப்புள்ளி 141 ஆகவும், மாத்தளை மாவட்டத்துக்கான வெட்டுப்புள்ளி 140 ஆகவும், களுத்துறை, கேகாலை, கண்டி ஆகிய மாவட்டங்களுக்கு 139 ஆகவும் அறிவிக்கப்பட்டுள்ளன.

கணக்குப் பதிவாளருக்கான வெட்டுப்புள்ளி 209ஆக அறிவிக்கப்பட்டுள்ளது. காலி, மாத்தளை, கொழும்பு, கேகாலை ஆகிய மாவட்டங்களுக்கு இந்தப் புள்ளிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதனடிப்படையில் - இந்த மாதம் 25, 26ஆம் திகதிகளிலும் அடுத்த மாதம் 2, 9ஆம் திகதிகளிலும் கொழும்பிலுள்ள உள்நாட்டலுவல்கள் அமைச்சில் நேர்முகப் பரீட்சை நடைபெறவுள்ளன.

எழுதுவினைஞர், களஞ்சியப் பொறுப்பாளர் ஆகிய பதவிகளுக்கு 77 ஊனமுற்றோர் உட்பட 2481 பேரும், கணக்குப் பதிவாளர் பதவிகளுக்கு ஊனமுற்றோர் உட்பட 107 பேரும் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர்.

## தமிழீழ மீட்புநிதி சான்றிதழைத் தவறவிட்டோர்

# மீளளிப்பு பெயர் விபரப் பட்டியலில் பெயர் உள்ளதா என அறிய வசதி!

தமிழீழ மீட்புநிதிக் கடன் சான்றிதழைத் தவறவிட்டோர், 2004ஆம் ஆண்டுக்கான மீட்புநிதி மீளளிப்புப் பட்டியலில் தமது பெயர் தெரிவுசெய்யப்பட்டுள்ளதா என்பதை அறிந்துகொள்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அடையாள ஆவணத்துடன் கீழ்க்காணும் நேர அட்டவணைக்கிணங்க வருகை தந்து 2004ஆம் ஆண்டுக்கான மீட்புநிதி மீளளிப்புப் பட்டியலைப் பார்வையிட்டுத் தமது தெரிவை உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறை அறிவித்துள்ளது.

| | | | |
|---|---|---|---|
| *10.09.2004 (வெள்ளி)* | | | |
| அரசியற்துறை செயலகம் | மானிப்பாய் | காலை | 08.30 மணி - 10 மணி. |
| அரசியற்துறை செயலகம் | சண்டிலிப்பாய் | முற்பகல் | 10.30 மணி - 12 மணி. |
| அரசியற்துறை செயலகம் | சுன்னாகம் | நண்பகல் | 12.30 மணி - 2 மணி. |
| அரசியற்துறை செயலகம் | நீர்வேலி | பிற்பகல் | 02.30 மணி - 4 மணி. |
| *11.09.2004 (சனி)* | | | |
| அரசியற்துறை செயலகம் | வல்வெட்டித்துறை | காலை | 08.30 மணி - 10 மணி |
| அரசியற்துறை செயலகம் | தம்பசிட்டி | முற்பகல் | 10.30 மணி - 12.மணி |
| அரசியற்துறை செயலகம் | கரவெட்டி | பிற்பகல் | 01.00 மணி - 3.00 மணி |
| *12.09.2004 (ஞாயிறு)* | | | |
| அரசியற்துறை செயலகம் | கைதடி | காலை | 08.30 மணி - 9.30 மணி |
| அரசியற்துறை செயலகம் | சங்கத்தானை | முற்பகல் | 10.30 மணி - 12.00 மணி |
| அரசியற்துறை செயலகம் | நல்லூர் | பிற்பகல் | 03.00 மணி - 4.30 மணி |
| *13.09.2004 (திங்கள்)* | | | |
| அரசியற்துறை செயலகம் | வேலணை | காலை | 08.30 மணி - 9.00 மணி |
| வீரசிங்கம் மண்டபம் | யாழ்ப்பாணம் | முற்பகல் | 11.30 மணி - 1.00 மணி |
| *14.09.2004 (செவ்வாய்)* | | | |
| முத்திய கல்லூரி | கிளிநொச்சி | பிற்பகல் | 02.45 மணி - 4.00 மணி. |

# 87 ஆவது வெளிச்சம் இதழ் இன்று வெளிவருகிறது!

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகத்தின் கலை, இலககிய, சமூக இதழான வெளிச்சத்தின் 87 ஆவது இதழ் இன்று வெளிவருகின்றது.

இந்த இதழில், தமிழீழத் தேசியத் தலைவரின் கருத்துரையுடன்-மாலிகா, கல்வயல் வே.குமாரசாமி, சித்தாத்தன், துன்னாலை செல்வம், புதுவை இரத்தினதுரை, ஞாலவன், சோ.பத்மநாதன், அம்புலி, த.ஜெயசீலன் ஆகியோரின் கவிதைகளும், சாந்தன், அஜந்தி, ஆதிலட்சுமி சிவகுமார், செ.யோகநாதன், ஆர்.கே.ஆகியோரின் சிறுகதைகளும் இடம்பெற்றுள்ளன.

அத்துடன், செங்கைஆழியான், ஞானரதன் ஆகியோரின் கட்டுரைத் தொடர்களும், அ.இரவி, தூயவன் ஆகியோரின் ஏனைய கட்டுரைகளும் அடங்குகின்றன. மேலும், எஸ்.சிவமலர், ந.சத்தியபாலன் ஆகியோரின் நூல் மதிப்பீட்டுரைகளும், இராஜதர்ம ராஜாவின் நேர்காணலும் இடம்பெற்றிருக்கின்றன.

## நிகொட் - உலகவங்கி நிதி உதவியுடன்

# வட - கிழக்கு மாகாணத்தில் 9 புதிய வைத்தியசாலைகள்!

(திருகோணமலை)

உலகவங்கி, நிகொட் ஆகியவற்றின் நிதியுதவியுடன் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் 9 வைத்தியசாலைகள் புதிதாக அமைக்கப்படவுள்ளன.

இவற்றில் சில வைத்தியசாலைகள் மாவட்ட வைத்தியசாலைகளாகவும், சில லண்டன் தரத்தை ஒத்ததாகவும் அமைக்கப்படவுள்ளன என்று மாகாண சுகாதாரப் பணிப்பாளர் டொக்டர் எல்.குமாரவேற்பிள்ளை தெரிவித்தார்.

கொடிகாமம், பூநகரி, பளை, மாங்குளம், பெரியபண்டிவிரிச்சான், செட்டிகுளம், பாட்டாளிபுரம் போன்ற இடங்களிலேயே வைத்திய சாலைகள் புதிதாக அமைக்கப்படவுள்ளன.

கரடியனாற்றில் 22 லட்ச ரூபா செலவில் முதல் கட்டமாக புதிய வைத்தியசாலையை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதேவேளை - வடக்கு - கிழக்கு மாகாணத்தில் சுகாதாரசேவையில் பல்வேறு வெற்றிடங்கள் நிலவுகின்றன.

92 வைத்திய நிபுணர்களுக்கும், 285 வைத்தியர்களுக்கும், ஆயிரம் தாதியர்களுக்கும் 600 குடும்பநல உத்தியோகத்தர்களுக்கும் வெற்றிடங்கள் நிலவுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

### புலிகள் மீது...

அமையவேண்டும்.

இனப்பிரச்சினைக்கு அரசாங்கம் உரிய தீர்வை பெற்றுத்தரும் என்ற நம்பிக்கையை தமிழ்மக்கள் கொண்டுள்ளனர்.

எனினும், அரசாங்கம் சமாதானப் போக்கில் இரட்டைக் கொள்கைகளைக் கொண்டிருப்பதை அதன் அமைச்சர்களின் மாறுபட்ட கருத்துக்களிலிருந்து தெரிந்துகொள்ள முடிகிறது.

இந்த நிலையில் தமிழீழ விடுதலைப்புலிகள் மீது குற்றம் சுமத்தி, சமாதான முயற்சிகளை தாமதிக்கக்கூடாது.

தமிழீழ விடுதலைப் புலிகள் தமது தரப்பில் சமாதானத்துக்கான அனைத்து விடயங்களையும் உரியமுறையில் செய்துகொண்டிருப்பதாகவும் இரா.சம்பந்தன் தெரிவித்தார். (01)

# காணாமற் போனோர் குறித்த மூன்று மனுக்கள் விசாரணை

## யாழ். நீதிமன்றில் இடம்பெறுகிறது

(யாழ்ப்பாணம்)

பாசையூர், கொய்யாத்தோட்டம் பகுதியில் வைத்து 1996ஆம் ஆண்டு கைதுசெய்யப்பட்டு காணமற்போன மூவர் தொடர்பான ஆட்கொணர்வு மனு மீதான விசாரணைகள் நேற்று யாழ் மாவட்ட நீதிமன்றில் நடைபெற்றது.

இந்த விசாரணைக்கென அக்காலப்பகுதியில் கொய்யாத்தோட்டப் பதியில் இராணுவ அதிகாரியாகப் பணியாற்றி தற்போது பட்டலந்த இராணுவப் பயிற்சிக்கல்லூரியில் அதிகாரியாகப் பணியாற்றும் லெப்டினன் கேணல் ஏ.கருணசேகர நீதிமன்றிற்கு சமூகமளித்திருந்தார்.

காணாமற் போனோர் சார்பில் சட்டத்தரணிகளான றெமீடியல் மற்றும் அ.விநாயகமூர்த்தி ஆகியோர் ஆஜராகியிருந்தனர்.

இராணுவத்தின் சார்பில் இராணுவ சட்டத்தரணி கப்டன் குருப்பு அமுது விக்கிரம ஆராய்ச்சி ஆகியோர் ஆஜராகியிருந்தனர்.

விசாரணையில் சாட்சியமளித்த காணமற்போனவர்களான பெ.ஜெயகாந்தன், மைக்கல்பேனாட் ஜோன்சன், அன்ரனி அனிஸ்டன் ஆகியோரது உறவினர்களான ஜோவான் அன்ரனி, ஜோ.பாரதி, ஆ.பெனடிக்ட் ஆகியோர் இராணுவத்தினர் அவர்களை கைது செய்ததை எதுவித சந்தேகமுமின்றி உறுதிசெய்வதாகத் தெரிவித்தனர்.

இவ்வழக்கை விசாரித்த யாழ் மாவட்ட நீதிபதி ரி.விக்னராஜா இந்த விசாரணைகளை அடுத்த மாதம் 12 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (ப)

# நயினை நாகபூசணி செய்தித் திருத்தம்

கடந்த 31.8.2004 நமது ஈழநாடுபத்திரிகையில் 5ஆம் பக்கத்தில் நாகபூசணி அம்மனுக்கு 99 அடியில் இராசகோபுரம் எனும் தலைப்பிலான செய்தியில் தேவஸ்தான நிர்வாகசபை இத்திட்டத்தை முன்வைத்துள்ளது எனவும், இதற்கான நன்கொடைகள் அடியார்களிடமிருந்து கோரப்பட்டுள்ளது என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது

இச் செய்தியில் நிர்வாகசபை முன்வைத்துள்ளது நன்கொடைகள் அடியார்களிடமிருந்து கோரப்பட்டுள்ளது என்பதுவும் தவறானது இவ்வாலயத்தில் நிர்வாகசபை என ஒரு அமைப்பு இல்லை. ஆலயத்தை நிர்வகிப்பது அறங்காவலர்சபையே. தற்போது அறங்காவலர்சபை எதுவும் செயற்படவில்லை ஆலயத்திற்கு இராசகோபுரம் அமைக்கும் திட்டம் சில வருடங்களுக்கு முன்னரே முன்வைக்கப்பட்டதொன்று என்பதையும் வாசகர்களுக்கு இத்தால் அறியத் தருகிறோம்.

# காணாமற்போனோர் விசாரணை அடுத்த மாதத்துக்கு ஒத்திவைப்பு!

(யாழ்ப்பாணம்)

காணாமற்போனோர் தொடர்பான எட்டு வழக்குகளின் விசாரணை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 11ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

1996/97ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் காணாமற்போன எட்டுப் பேர் தொடர்பான வழக்கு விசாரணை நேற்று யாழ். நீதிமன்றில் நடைபெறவிருந்த போதும், யாழ். மேல்நீதிமன்ற நீதிபதி கே.பி.எல்வரதராஜன் வர்த்தகச் சட்டங்கள் தொடர்பான கருத்தரங்கொன்றில் பங்குபற்றும் பொருட்டு ஹொங்கொங்கிற்குச் சென்றுள்ளதால் இந்த வழக்கு விசாரணைகளை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 11ஆம் திகதி அழைக்குமாறு மேல் நீதிமன்றப்பதிவாளர் கட்டளையிட்டுள்ளார்.

இதேவேளை 1996ஆம் 1997ஆம் ஆண்டு காலப்பகுதியில் சாவகச்சேரிப் பகுதியில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு காணாமற்போன 22 பேர் தொடர்பான விசாரணைகள் எதிர்வரும் 9ஆம், 10ஆம் திகதிகளில் சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றில் நடைபெறவுள்ளது. காணாமறபோனோர் சார்பில் வழக்கறிஞர்களாக றெமீடியஸ் மற்றும் அ.விநாயகமூர்த்தி ஆகியோர் சமூகமளிக்கவுள்ளனர். (ப)

### எலும்புக்கூடு..

கிடைப்பட்ட ஒரு பெண்ணின் சடலமாக இது இருக்கலாமெனவும் இந்தச் சடலம் ஒருவருட காலத்திற்குள் புதைக்கப்பட்டிருக்கலாமெனவும் மாவட்ட வைத்திய அதிகாரி கதிரவேற்பிள்ளை தெரிவித்தார்.

இவ்விசாரணைகளை மேற்கொண்ட மாவட்ட நீதிபதி அரியரட்ணம், மண்டான் பகுதி கிராம சேவகர், உடுப்பிட்டி றோமன் கத்தோலிக்க பாதிரியார் மற்றும் மயானப் பகுதியிலிருந்து எலும்புக்கூடு இருந்த புதைகுழியை தோண்டிய நால்வரையும் நாளை நீதிமன்றில் ஆஜர் செய்யுமாறு நெல்லியடிப் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (12)

### கழுத்துவெட்டப்...

நீதிவானுமாகிய லிங்கா துரைராசாவால் பார்வையிடப்பட்டு, யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இந்தக் கொலை தொடர்பான விசாரணைகளை யாழ். பொலிஸார் ஆரம்பித்துள்ளதுடன், இறந்தவரது உடல் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

(ப,கு,64,55,63)

### புலிகளுடன்...

எஞ்சுவது ஒன்றும் இல்லை என்பதால் தான் எந்தவொரு காரணத்திற்குமாக இடைக்கால நிர்வாக சபையினை வழங்கமுடியாது என்ற இறுக்கமான நிலைப்பாட்டில் இருக்கின்றோம்.

தற்பொழுது தமிழீழவிடுதலைப் புலிகள் நிபந்தனை ஒன்றை விதித்துள்ளனர். பேச்சுவார்த்தை மேடைக்கு வருவதாயின் இடைக்கால நிர்வாக சபையை வழங்கவேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுதான் இங்குள்ள பிரச்சினை இடைக்கால நிர்வாக சபையை வழங்க முடியாது அதனால் அரசாங்கம் ஒரு நிலைப்பாட்டிலும் நாம் ஒரு நிலைப்பட்டிலும் இருக்கின்றோம்.

இடைக்கால நிர்வாக சபையை ஒருபோதும் வழங்கமுடியாது. இடைக்கால நிர்வாக சபையை அடிப்படையாக வைத்து சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க முடியாது. எனவே சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் இடம்பெறமாட்டாது எனத் தெரிவித்துள்ளார்.

### பயங்கரவாதத்...

தாக அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு, ஏனைய நாடுகளின் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினருக்கு பயிற்சிகளை வழங்கிவருவது குறிப்பிடத்தக்கது.


## நமது ஈழநாடு விளம்பரக் கட்டணங்கள்

| அளவு | கறுப்பு/வெள்ளை | கலர் |
|---|---|---|
| முழுப்பக்கம் | ரூபா 10,000 | ரூபா 22,000 |
| அரைப்பக்கம் | ரூபா 5,000 | ரூபா 12,000 |
| கொலம் செ.மீ Colum cm | ரூபா 50 | ரூபா 120 |

## மரண அறிவித்தல்

7cm x 2 கொலம் (colum) அளவுடைய மரண அறிவித்தல் விளம்பரங்கள் இலவசமாகவே பிரசுரிக்க ஏற்றுக்கொள்ளப்படும். அதற்கு மேற்பட்ட அளவுக்கு மட்டுமே கட்டணம் அறவிடப்படும்.


இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 08.09.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.